


AMMA NAANA

**Mr. V. R. Govindasamy**
**Mrs. G. Rajam**
Founders
**Ph: +91 94443 99199**

**M. Senthilraj**
CEO
**Ph: +91 94443 99998**

# ECR
# MRC NAGAR
# MADURAVAYOL

No.100, Chamiers Road,
Teynampet,
Chennai - 600 018.

+91 98843 09993

ammanaana.staff@gmail.com



# புத்தாண்டு 2026

# திருவள்ளுவர் ஆண்டு 2057

# தை 01 பொங்கல் நல்வாழ்த்துகள்

**Published & Edited by:**
The President on behalf of Kongu Nanbargal Sangam, Velli Vizha Illam, No. 34 Srinivasa Perumal Sannathi 1st Street,
Royapettah, Chennai - 600014.
**Printed by:**
M.Shaik Dawood, Dawood Graphics,
No. 63, Muthu Mudali Street, Royapettah, Chennai - 600 014.

## நிர்வாகக்குழு உறுப்பினர்கள்

**தலைவர்**
**வீ.க.செல்வக்குமார்**
Chennal Mettex Lab Pvt. Ltd.
98410 78949

**செயலாளர்**
**M.அமராபதி**
Jairram Hi-Tech Products
94440 60885

**பொருளாளர்**
**C.கொங்குவேள்** Dharani Developers P.Ltd., (PGP Group)
98408 90034

**துணைத் தலைவர்கள்**
**R.சண்முகவேல்**
Sunbright Designers Pvt. Ltd.,
98410 22960

**V.P.வீரப்பன்**
Sengam Transport
94432 66610

**இணைச்செயலாளர்கள்**
**C.அரவிந்தன்**
K Labs Technology & Solutions Pvt. Ltd.,
98419 23808

**P.ரவி**
SKV Educational Institution's
9842754245

## செயற்குழு உறுப்பினர்கள்

**அருள் பொன்னுசாமி**
Ponmani Engineers Pvt. Ltd.,
9884022266

**V.R.பாலசுப்பிரமணியன்**
Advocate & Labour Law Consultant
94444 04593

**S.அன்பழகன்**
BISMARCK Business Network Advisor (India, UAE, Hong Kong)
98403 09394

**K.ஜெகதீசன்**
Unitech Gorup
91767 17131

**S.சீனிவாசன்**
Prim Drugs & Pharmaceuticals I.Pvt., Ltd.,
94440 18021

**N.P.இசையழகன்**
Ms. Esal & Co. Chartered Acou
94444 04595

**R.கந்தகார்த்திக்**
RKG & Sons Associates
90036 90695

**கதிர்வேல் கணபதியப்பன்**
ISSM Business School
98840 22255

**K.G.ஜோதீஷ்குமார்**
Athiappa Chemicals (P). Ltd.,
9442488000

**A.நடராஜன்**
NU-Tech Components
9789973123

**K.ஜெகன் நாதன்**
Sri Krishna Power Loom Society
94437 42696

**K.நித்தியானந்தன்**
Sri Devkrish Group
98422 29503

**விசா M.சன்முகம்**
Sri Ambika Nets
9944933311

**S.குணசேகர்**
BRT Spinner Pvt. Ltd.,
9366635141

**T.P.நடராஜன்**
V.M.D. Groups, Chithode
9842766789

**D.மாணிக்கவாசகம் சிவப்பிரகாசம்**
RAWS N-Greens Health Care (P). Ltd.,
9443745879

**பரமேஸ்வரி சின்னசாமி**
P&C Projects (P) Ltd.,
9444070033

**Dr.சண்முகப்பிரியா MBBS**
AGS Complex & Ware Houses,
7824880456

பதிப்பாளர்
கொங்கு நண்பர்கள் சங்கம்,
வெள்ளி விழா இல்லம்,
எண். 34 ஸ்ரீநிவாச பெருமாள் சன்னதி 1-வது தெரு,
ராயப்பேட்டை, சென்னை - 600014.

ஆசிரியர் குறிப்பு
வாசகர்களிடமிருந்து கதை / கவிதை / கட்டுரை / சென்னை கொங்கு நண்பர்கள் மலர் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு. கட்டுரை இன முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இருந்தால் சாலச் சிறந்தது. வரும் கதை, கட்டுரை முதலியவற்றை வெளியிடுவதோ அல்லது சுருக்குவதோ ஆசிரியருக்கு முழு உரிமை. நேர்காணல்களும், சிறப்புக் கட்டுரையாளரின் கருத்துகளும் அவரவர்களின் சொந்தக் கருத்துகளே.

# தலைவர் மடல்

அன்புடையீர் வணக்கம் நலம் நலம் பல விழைகிறேன்.

நமது சங்கத்தின் முன்னாள் தலைவர் கொங்கு மாமணி எஸ். அருணாசலம் அவர்கள் தற்போது நமது சங்கத்தின் மகளிர் இல்லமாக விளங்கி வரும் கொங்குநாடு இல்லத்தை 33 ஆண்டுகளுக்கு முன் கட்டிய தளகர்த்தாக்களில் ஒருவர்! அகவை 90 நிரம்பிய இளைஞர்!
அருட்செல்வர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட கொங்குநாடு அறக்கட்டளையின் துணைத் தலைவர்!!
அவரைப் பற்றிய கட்டுரை இம்மாத இதழிலே வெளியிடுவதில் பெருமை கொள்கிறது கொங்கு நண்பர்கள் சங்கம்! 91 ஆம் அகவையை விரைவில் எட்டும் ஐயா எஸ் அருணாச்சலம் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதேபோல அகவை 90 நிரம்பிய சிற்பி பாலசுப்ரமணியம் ஐயா அவர்கள்! கவிஞர், மொழிபெயர்ப்பாளர், இலக்கிய படைப்பாளி என பன்முகத் தன்மை கொண்ட பேராசிரியர் அவருக்கு சிறப்பு சேர்க்கும் வண்ணமாக சிறு கட்டுரை ஒன்றையும் வரைந்து உள்ளோம்.

திரை உலக மார்க்கண்டேயன் என்று அழைக்கப்படும் நடிகர் சிவக்குமார் அவர்கள் பள்ளிப் பருவத்திலேயே ஓவியம் மீது கொண்ட காதலால் சென்னை வந்து கவின் கலை கல்லூரியில் தன் ஓவியக் கலைக்கு மேலும் மெருகேற்றிக் கொண்டார். திரையுலகில் தான் கோலோச்சிக் கொண்டிருந்த பொழுதிலும் தனது இரு தவப்புதல்வர்கள் சூர்யா, கார்த்தி இருவரும் இப்பொழுது பெரும் திரை நாயகர்களாக வலம் வந்து கொண்டிருக்கும் நிலையிலும் எந்தவித ஆர்ப்பாட்டமும் ஆடம்பரமும் இல்லாமல் வாழ்ந்து வரும் கலைக் குடும்பத்தின் தன்னேரில்லாத் தலைவர்! கம்பனையும் வள்ளுவனையும் எளிய மக்களுக்கும் புரியும் வகையில் பேசும் ஆற்றல்மிகு பேச்சாளராக திரை உலகிற்கு கிடைத்த ஒரு இலக்கியப் புதையலாகத் திகழ்ந்து கொண்டிருப்பவர்!

அப்பெருமகனாருக்கு தமிழ்நாடு அரசு கவின் கலை பல்கலைக்கழகத்தின் சார்பில் மதிப்புறு முனைவர் பட்டம் வழங்கப்பட்டுள்ளது.
அப்பட்டத்தை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், அதனை ஏற்று நமது தமிழ் மண்ணுக்குப் பெருமை சேர்த்த திரு. சிவக்குமார் அவர்களுக்கும் நன்றியையும், நல்வாழ்த்துகளையும் உரித்தாக்குவோம்.

நமது சங்கத்தின் செயலாளர் திரு எம் அமராவதி அவர்களின் தந்தையாரும் மூத்த வழக்கறிஞருமான திரு.கே. மருதாச்சலம் ஐயா அவர்கள் வயது மூப்பின் காரணமாக இயற்கை எய்தினார். அவருக்கு சங்கத்தின் சார்பில் அஞ்சலி செலுத்துவோம்.

**நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்**
**பெருமை உடைத்துஇவ் வுலகு.**

– (குறள் : 336)

நேற்று உயிரோடு வாழ்ந்தவரை இன்று இல்லாமல் செய்து விட்டோம் என்ற இறுமாப்பாகிய பெருமையுடையது உலகம்! வாழ்க்கை!
(பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் உரை)



நன்றி!

அன்புடன்
**வீ.க.செல்வக்குமார்**
தலைவர்



# கொங்கு நண்பர்கள் சங்கம்
## சென்னை

(பதிவு எண் : 282/76)



## கொங்கு மகளிர் விடுதி

Sharing Room | Double Cot
CCTV | Wifi | Safety Secure
Bathroom Heater | Water Dispenser
Washing Machine | Two Wheeler Parking

"கொங்கு நாடு இல்லம்"
27, அம்மையப்பன் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 14
**chennaikongu@gmail.com**
**Ph : 044 - 4266 8046, Cell : 63839 85919**



## தங்கும் விடுதி




"தீரன் சின்னமலை மாளிகை"
நெ,72, பீட்டர்ஸ் ரோடு
இராயப்பேட்டை,
சென்னை-600 014.
**chennaikongu@gmail.com**
**Ph : 044 - 4266 8046**
**Cell : 93815 45451**

AC Rooms | Double Cot
TV | CCTV | Wifi | Safety Secure
Bathroom Heater | Water Bottle
Towel | Water Dispenser

**Discount for Members**

## கொங்கு மாணவர் விடுதி




AC Rooms Available
Double Cot
CCTV | Wifi
Safety Secure
Bathroom Heater
Water Dispenser
Washing Machine
Two Wheeler Parking

"வெள்ளி விழா இல்லம்"
34, சீனிவாசப் பெருமாள்
சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 14.
**chennaikongu@gmail.com**
**044 - 4351 0460 | Cell : 63839 85919**

# அகவை தொண்ணூறிலும் அயராத தமிழ்ப் பணி – கவிஞர் சிற்பி!



அகவை 90 நிரம்பிய மூத்த தமிழறிஞர், கவிஞர், மொழிபெயர்ப்பாளர், பேராசிரியர் திரு. சிற்பி பாலசுப்பிரமணியம் ஐயா அவர்களை நமது சங்கத் தலைவர் வீ.க. செல்வக்குமார் அவர்களும், சங்க செயற்குழு உறுப்பினர் நித்தியானந்தம் அவர்களும், உறவுகளுடன் நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்ற காட்சி!

## கவிஞர் சிற்பியை பற்றிய ஒரு சிறு குறிப்பு

சிறந்த கவிஞர், நல்ல மொழிபெயர்ப்பாளர், புகழ்பெற்ற கல்வியாளர், இலக்கிய இதழாசிரியர் எனப் பன்முகம் கொண்ட சிற்பி பாலசுப்பிரமணியம் ஒரு பல்துறை அறிஞர்.

கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டம் ஆத்துப் பொள்ளாச்சி கிராமத்தில் 1936 இல் பிறந்தவர். கேரளத்தில் பள்ளிக் கல்வி பயின்றவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பி.ஏ., ஆனர்ஸ் (தமிழ் இலக்கியம்) கற்று, 1958 முதல் பொள்ளாச்சி நல்லமுத்து மகாலிங்கம் கல்லூரியில் விரிவுரையாளராக இருந்தார். 1989இல் கோவை பாரதியார் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பொறுப்பேற்று 1997 வரை சிறப்புறப் பணிபுரிந்து ஓய்வு பெற்றார். மேலும், இந்திய இலக்கிய அமைப்பாகிய சாகித்திய அகாதெமியின் தமிழ் ஒருங்கிணைப்பாளராக 2007 தொடங்கி 2012வரை திறம்படச் செயலாற்றியவர். மொழிபெயர்ப்புக்காகவும் (2001), படைப்பிலக்கியத் துக்காகவும் (2003) இருமுறை சாகித்ய அகாதமி விருது பெற்றவர்.

தமிழக அரசின் பாவேந்தர் விருது, கலைமாமணி விருது, குன்றக்குடி ஆதீனக் கபிலர்விருது, திருவனந்தபுரம் தமிழ்ச் சங்க மகாகவி உள்ளூர் விருது, மூத்த எழுத்தாளருக்கான லில்லி தேவசிகாமணி விருது, இலக்கியச் சிந்தனை விருது எனப் பலவிருதுகள் பெற்றவர்.

இப்போது அருட்செல்வர் நா.மகாலிங்கம் மொழிபெயர்ப்பு மைய இயக்குநர்.

சாகித்திய அகாதெமியின் தமிழ்மொழி ஒருங்கிணைப் பாளராகவும், நிர்வாகக் குழு உறுப்பினராகவும் உள்ளார்.



# சிற்பியின் சிறப்புகள்...

## நூலாசிரியர்

| | |
|---|---|
| கவிதை நூல்கள் | 22 |
| கவிதை நாடகம் | 01 |
| காப்பியம் | 01 |
| சிறுவர் நூல்கள் | 02 |
| உரைநடைநூல்கள் | 16 |
| வாழ்க்கை வரலாறு | 10 |
| மொழிபெயர்ப்பு | 23 |
| ஆங்கில நூல் | 01 |
| பதிப்பித்த நூல்கள் | 47 |
| உரை நூல்கள் | 03 |

## நெறியாளர்

| | |
|---|---|
| பி.எச்.டி மாணவர்கள் | 15 |
| எம்ஃபில் மாணவர்கள் | 6 |





## இதழாளர்

வானம்பாடி (கவிதை இதழ்)

அன்னம் விடு தூது (இலக்கிய மாத இதழ்)

வள்ளுவம் (ஆசிரியர் குழு)

கவிக்கோ (ஆசிரியர் குழு)

கணையாழி (ஆசிரியர் குழு)

மகாகவிதை (ஆலோசகர்)

## பெற்ற விருதுகளில் சில

பாரதிதாசன் விருது (1987)

மொழிபெயர்ப்புக்கான சாகித்ய அகாடமி விருது (2001)

தமிழுக்கான சாகித்ய அகாடமி விருது (2003)

ராஜா சர் முத்தையா செட்டியார் பிறந்தநாள் நினைவு விருது (2006)

வாழ்நாள் இலக்கிய சாதனை விருது – (புதியதலைமுறை தமிழன் விருதுகள் 2018)

பத்மஸ்ரீ விருது (இந்திய அரசு)(2022

# உள்ளமே உனதுடைமை!

– முனைவர் வே. குழந்தைசாமி



உள்ளமே உனதுடைமை உணர்ந்திடு வாய் நீ தம்பி !
உள்ளதே போதுமென்று ஓய்ந்திட வேண்டாம் நம்பி !

தன்னம்பிக்கை ஒன்றுதான் உன்னைத் தூக்கி உயர்த்திடும் !
நன்னம்பிக்கை இல்லாவிடில் உந்தன் உள்ளம் அயர்ந்திடும் !
இன்னல்கள் ஏற்றிடவே இரும்புபோல் நீ உறுதிகொள்!
முன்னேற்றம் பெறுவதற்கு முயற்சி ஒன்றே திறவுகோல்!

உள்ளமே உனதுடைமை உணர்ந்திடு வாய் நீ தம்பி !
உள்ளதே போதுமென்று ஓய்ந்திட வேண்டாம் நம்பி !

உடன்பாட்டுச் சிந்தனையே, உள்ளத்துக்கு உறுதுணையாம்!
படர்ந்திடும் எதிர்மறை எண்ணத்தால் வரும்எதிர்வினைகள் !
இடங்கொடுத்து அதனை நீ, உள்ளத்தில் ஏற்றிடாதே !
இடர்ப்படுத்தி உன்னை அது பள்ளத்தில் தூற்றிவிடும்

உள்ளமே உனதுடைமை உணர்ந்திடு வாய் நீ தம்பி !
உள்ளதே போதுமென்று ஓய்ந்திட வேண்டாம் நம்பி !

யானைகொண்ட வலிமையெல்லாம் ஆனததன் தும்பிக்கையால் !
மாணவர்கள் வலிமையெல்லாம் ஆனதவர் நம்பிக்கையால் !
பூனைகூடப் புலியாய் மாறும் போட்டியென்று வந்துவிட்டால் !
சேனையெல்லாம் சிதறிஓடும் சிங்கம்வந்து நுழைந்துவிட்டால் !

உள்ளமே உனதுடைமை உணர்ந்திடு வாய் நீ தம்பி !
உள்ளதே போதுமென்று ஓய்ந்திட வேண்டாம் நம்பி !

# வருந்துகிறோம்...



நமது சங்க செயலாளர் திரு எம் அமராபதி அவர்களின் தந்தையாரும், மூத்த வழக்கறிஞருமான **கே.மருதாச்சலம் பிஏ.பிஎல்** அவர்கள் கடந்த நவம்பர் 25ஆம் தேதி இயற்கை எய்தினார். அவரது மறைவிற்கு சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

அன்புடையீர், வணக்கம்.

எனது தந்தையாரும், மூத்த வழக்கறிஞருமான திரு. கே. மருதாச்சலம் பிஏ.பிஎல் அவர்கள் அவிநாசியிலுள்ள அவரது இல்லத்தில் கடந்த நவம்பர் 25ஆம் தேதி அன்று தனது 91 வது வயதில் இயற்கை எய்தினார். வயது மூப்பின் காரணமாக அவர் மறைந்தாலும், தந்தையின் இழப்பு என்பது ஈடுசெய்ய முடியாத ஒன்றுதானே!

அத்தகைய துயரமிகு நேரத்தில் எனது இல்லம் தேடி வந்து நேரிலும், அலைபேசி வாயிலாகவும், ஆறுதல் சொல்லி எம்மையும் எமது குடும்பத்தாரையும் ஆற்றுப்படுத்திய அனைத்து உறவுகளுக்கும், நட்புகளுக்கும் இத் தருணத்தில் எனது நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

அன்புடன்,
எம்.அமராபதி
செயலாளர்

# கார்த்திகையில் ஓர் ஆன்மீகம்

- அ.பாலசுப்ரமணியன், ஈரோடு.

வரகீசன் – வடிவுடையம்மை கோவில், மொடக்குறிச்சி
சென்ற எனக்கு அங்கே பாலாலயம் என்ற பொழுது
எழுந்த சில சிந்தனைகளின் சாரம்!

நிலையில்லா மண்குதிரை நீள்வட்டம் சுழன்றிடினும்
கலையுள்ள ஓவியமாய்க் கனிவுடனே நீ நடந்து
இலைவாகும் செடிபோலே ஈன்றெடுத்த மகன்விதைத்தாய்
தலைவாநின் தமிழ்ப்பாதம் தாழ்பணிந்து போற்றுவமே!

அன்னையே சிவஞானி அடுத்தவன் நீநீ
உன்னையே அறிவாய்நீ உளம்தனில் எழுவே நீ
நன்னயம் புரிவாய்நீ நற்றமிழ்த் தமிழாநீ
இன்னொரு அறிவால் நீ இயைந்து நீ தெளிவாமே!

தெளிவாய்த் தெரிந்து தேன்மதுரச் சொல்லாலே
வளிவாய்ப் புகுந்து ஏன் எனது என்றாகிக்
களிவாய்க் கவர்ந்து கடுமலர்த்தாழ் தலையாட
ஒளிவாய்ச் சிவனாவான் மெண்மலர்த்தாள் உமையுடனே

காதம் கடுகடுக்கும் கற்பனையும் ஓடிவிடும்
சாதம் விறுவிறுக்கச் சார்ந்தவளை ஓட்டிவிடும்
போதம் நிறைநாளில் புவியளக்கச் செய்தவனே
யாதும் இலையிங்கே நம்வாழ்வும் பொய்யாமே!

நீயே ஒன்றே நிலையாக நிற்கின்றாய்
தாயே நன்றாம் தமிழ் வாழ்த்தும் சுந்தரியே
தீயோ ணென்வாழ்வு திசைதிரும்பி நின்றிடினும்
சேயோர் வாழ்வெல்லாம் திசைநோக்கிக் காத்திடுமே!







நாமக்கல் மாவட்டம் விளையன் குலத்தை சார்ந்தவரும், நமது சங்கத்தின் உறுப்பினருமான எஸ்.என். கொளந்தன் அவர்கள் கடந்த மாதம் 05.11.2025 அன்று ஆசிய நாடுகளுக்கு இடையிலான மூத்தோர் தடகள சாம்பியன் போட்டியில் 85+ வயது பிரிவில் 3 கிலோ குண்டு ஏறியும் போட்டியில் கலந்துகொண்டு மூன்றாவது இடத்தைப் பிடித்து வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார் என்பது பெருமைக்குரிய ஒன்றாகும். சங்கத்தின் சார்பாக அவர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இதனைத் தொடர்ந்து தென் கொரியாவில் நடைபெறவிருக்கும் உலக ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்ளும் வாய்ப்பினையும் இவர் பெற்றுள்ளார் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

# வெற்றி உங்கள் பக்கம்

புத்தக ஆசிரியர்

**சிந்தனைக் கவிஞர் கவிதாசன்**




“

எண்ணங்களை செம்மைப்படுத்துவதில் தான் வாழ்க்கை பயணத்தை இனிமை யாக்க முடியும் என்று கூறும் நூல்.

வீழாமல் இருப்பதல்ல வெற்றி; வீழும் போதெல்லாம் எழுவது தான் வெற்றி. முயற்சி செய்பவன் சாதனை படைக்கிறான்; தொடர்ந்து முயற் சிப்பவன் சரித்திரம் படைக்கிறான். தோல்விகளையும், சோதனைகளையும் எதிர்கொள்ளும் துணிவை தோழனாக்கிக் கொள்ள வேண்டும் என்கிறது.

செயல்களை செம்மையாக்கி திறன்களை கூர்மையாக்கி, இலக்கு நோக்கி பயணிக்க வேண்டும். முயற்சியே மூச்சுக்காற்று என்ற முனைப்புடன் செயல்பட்டுக் கொண்டே இருக்க அறிவுரைக்கிறது. சவால்களை வென்று நம்பிக்கையோடு முயற்சி செய்தால், ஆற்றல் மிக்க வெற்றிகளை குவிக்கலாம் என்கிறது. தன்னம் பிக்கை ஊட்டும் பொன்மொழிகள் உடைய நூல்.

**– புலவர் சு.மதியழகன்**




சோலை பதிப்பகத்தின் சார்பில் கவிஞர் கா.சி குமரேசன் எழுதிய கூட்டுப்புழுவின் கிரகப்பிரவேசம் நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. விழாவிற்கு சிறப்பு விருந்தினராக சிந்தனை கவிஞர் கவிதாசன் கலந்துகொண்டு புத்தகத்தை வெளியிட்டார்.

# சாவினைக் கடந்த பாரதி!

தேசபக்தியும் தெய்வபக்தியும்
தெளிவெனக் கொண்டவ வாழ்க!
வாசமலரினில் மனங்களைக் கடந்து
வடிந்த கவிதையே வாழ்க!
நேச மனதினில் நேரிய பார்வையில்
நிமிர்ந்து நடந்தவ வாழ்க!
பாச மொழியினில் ஞானம் அடைந்து
பாவென இணைந்தவா வாழ்க!

காசு எனும் சொல்லின் கலக வலையினைத்
தூசென மதித்தவா வாழ்க!
ஆசை மோதிடும் அவல நெஞ்சினை
அடக்கி ஆண்டவா வாழ்க!
ஆசுகவியன அகிலம் போற்றிட
ஆவியாய் இருப்பவ வாழ்க!
தூசு பதிந்திடும் நெஞ்சம் துலங்கிட
துணிவாய் இருப்பவ வாழ்க!

வீசும் காற்றினில் ஓசையாய் ஒழித்து
உள்ளம் இருப்பவ வாழ்க!
பேசும் சொற்களில் சொல்லாய் கலந்து
பெருமை அளிப்பவ வாழ்க!
தேசம் உனது பெருமையின் இணைந்து
திருவென நின்றது வாழ்க!
சாவினைக் கடந்த பாரதி உன்னை
சந்ததம் துதிப்போம் வாழ்க!

– கணியூரான்



தொடர்கதை

எழுதியவர்: பெ.தூரன்

# சங்ககிரிக் கோட்டையின் மர்மம்



சங்ககிரிக் கோட்டை!

## 10

## குகையின் ரகசியம்!

எல்லாரும் குகையை நோக்கி ஆவலோடு புறப்பட்டனர். கீழே இறங்குவது அவ்வளவு சிரமமாக இருக்கவில்லை. மேலும் குகையைக் காணவேண்டும் என்ற ஆர்வத்தால் சீக்கிரமாகவே அங்கு போய்ச் சேர்ந்தார்கள்.

வெளியில் நல்ல வெளிச்சம் இருந்தும் குகைக்குள்ளே ஒரே இருட்டாக இருந்தது. தங்கமணி டார்ச் விளக்கைப் போட்டுக் கொண்டே உள்ளே எச்சரிக்கையாக நடந்தான். ஜின்கா அவனைத் தொடர்ந்து சென்றது.

கண்ணகி அடுத்தபடியாகச் சென்றாள். சுந்தரம் "நான்தான் பின்னணி மெய்காப்பாளன்" என்று கூவிக் கொண்டே பின்னால் நடந்தான் அவன். கூவியதின் எதிரொலி குகையில் உள்பக்கத்திலிருந்து பயங்கரமாகக் கேட்டது.

சில இடங்களில் குனிந்து செல்ல வேண்டியிருந்தது. ஓரிடத்திலே தண்ணீர் சொட்டிற்று. அதனால் அந்த இடத்திலே ஏதோ நெஞ்சு கலங்கும்படியான ஓர் ஒலி கேட்டது.

"அண்ணா" என்று கண்ணகி தங்கமணியின் கையைப் பற்றினாள்.

"அது ஒன்றும் இல்லை. தண்ணீர் சொட்டுவதால் உண்டாகும் சத்தத்தின் எதிரொலிகள் மாறிமாறி உள்ளேயே சுற்றுவதால் இப்படி வினோதமான ஒலி கேட்கிறது" என்று தங்கமணி அவளுக்குத் தைரியம் ஊட்டினான். அவனுடைய பேச்சும் விநோதமாக எதிரொலித்து அவன் கூறியதை உண்மையென்று காட்டிற்று.

வௌவால்கள் உள்ளிருந்து திடீர் திடீர் என்று பறந்து வெளியே ஓடின. ஆனால் அவை யார் மேலும் மோதாமல் அந்த இருட்டில் பறந்தது அனைவருக்கும் ஆச்சரியமாக இருந்தது. அந்த ஊர்மக்கள் கூறியவாறு அங்கு கருவண்டுகள் ஒன்றுமே இல்லை. வௌவால்களைத்தான் அப்படி எண்ணினார்கள் போலிருக்கிறது.

குகைக்குள்ளே சுமார் 60 மீட்டர் சென்ற பிறகு ஒரு சிறிய திருப்பம் காணப்பட்டது. தங்கமணி ஆவலோடு அதில் நுழைந்தான், மற்றவர்களையெல்லாம் அங்கேயே நிற்கச் சொல்லிவிட்டு அவன் மட்டும் ஜின்காவோடு அதில் கொஞ்ச தூரம் சென்றான்.

ஆனால் அந்தத் திருப்பத்திற்குமேலே ஒரு மீட்டர் வரைதான் வழி இருந்தது. அத்துடன் குகை முடிந்துவிட்டது. விளக்கைப் போட்டு அவன் துருவித் துருவிப் பார்த்தான். அதற்குமேல் வெறும் பாறைதான் தென்பட்டது.

அவன் திரும்பி வந்து அனைவருக்கும் அந்த உண்மையைத் சொன்னான். எல்லாருடைய உற்சாகமும் திடீரென்று மங்கிவிட்டது.

"அந்தப் பூசாரி எல்லாரையும் ஏமாற்றிப் பணம் பறிக்கிறான். சுரங்கப் பாதையென்று காட்டு மாரியம்மன் சிலைக்குப் பின்னால் இரண்டு மூன்று படிகளைக் காட்டிப் பணம் சம்பாதிக்கும் எத்தன் அவன்" என்றான் சுந்தரம்.

"நான் அப்பவே நினைத்தேன்" என்றாள் கண்ணகி.

“நினைத்து என்ன செய்கிறது? சொல்லியிருக்க வேண்டாமா?” என்று கோபித்துக் கொண்டான் சுந்தரம்.

“அவனுடைய கொடுவாள் மீசையைப் பார்த்து நான் பயந்து விட்டேன்” என்று விளக்கம் தந்தாள் கண்ணகி.

“சரி, குகைக்குள் இருந்துகொண்டே பேசினால் எதிரொலிக் குழப்பம்தான் காதில் விழுகிறது. முதலில் வெளியே போவோம். போகும்போது மற்றொரு தடவை குகையின் பாறைச் சுவர்களை நன்றாகப் பார்த்து விடுவோம்” என்று தங்கமணி கூறினான்.

“புதையல் எல்லாம் வெறும் கதை. கண்ணகிக்கு வைர மூக்குத்தி போச்சு” என்றான் சுந்தரம்.

“போடா அசடு – இந்தக் காலத்திலே யார் மூக்குத்தி போடுகிறார்கள்? அதிகமாக நகை அணிந்து கொள்வதே அநாகரிகம் – அதோடு புதையல் கிடைத்தால் அது அரசாங்கத்திற்குச் சேரவேண்டியது. நீயே வைத்துக் கொள்ளலாம் என்று நினைக்காதே” என்று கண்ணகி முடிப்பதற்கு முன்னே “ஒரு குட்டிப் பிரசங்கமே செய்துவிட்டாய். புதுமைப் பெண் வாழ்க” என்றான் சுந்தரம். தங்கமணி ிஎல்லாரும் குகையை நோக்கி ஆவலோடு புறப்பட்டனர். கீழே இறங்குவது அவ்வளவு சிரமமாக இருக்கவில்லை. மேலும் குகையைக் காணவேண்டும் என்ற ஆர்வத்தால் சீக்கிரமாகவே அங்கு போய்ச் சேர்ந்தார்கள்.

வெளியில் நல்ல வெளிச்சம் இருந்தும் குகைக்குள்ளே ஒரே இருட்டாக இருந்தது. தங்கமணி டார்ச் விளக்கைப் போட்டுக் கொண்டே உள்ளே எச்சரிக்கையாக நடந்தான். ஜின்கா அவனைத் தொடர்ந்து சென்றது.

கண்ணகி அடுத்தபடியாகச் சென்றாள். சுந்தரம் “நான்தான் பின்னணி மெய்காப்பாளன்” என்று கூவிக் கொண்டே பின்னால் நடந்தான் அவன். கூவியதின் எதிரொலி குகையில் உள்பக்கத்திலிருந்து பயங்கரமாகக் கேட்டது.

சில இடங்களில் குனிந்து செல்ல வேண்டியிருந்தது. ஓரிடத்திலே தண்ணீர் சொட்டிற்று. அதனால் அந்த இடத்திலே ஏதோ நெஞ்சு கலங்கும்படியான ஓர் ஒலி கேட்டது.

“அண்ணா” என்று கண்ணகி தங்கமணியின் கையைப் பற்றினாள்.

“அது ஒன்றும் இல்லை. தண்ணீர் சொட்டுவதால் உண்டாகும் சத்தத்தின் எதிரொலிகள் மாறிமாறி உள்ளேயே சுற்றுவதால் இப்படி வினோதமான ஒலி கேட்கிறது” என்று தங்கமணி அவளுக்குத் தைரியம் ஊட்டினான். அவனுடைய பேச்சும் விநோதமாக எதிரொலித்து அவன் கூறியதை உண்மையென்று காட்டிற்று.

வௌவால்கள் உள்ளிருந்து திடீர் திடீர் என்று பறந்து வெளியே ஓடின. ஆனால் அவை யார் மேலும் மோதாமல் அந்த இருட்டில் பறந்தது அனைவருக்கும் ஆச்சரியமாக இருந்தது. அந்த ஊர்மக்கள் கூறியவாறு



அங்கு கருவண்டுகள் ஒன்றுமே இல்லை. வௌவால்களைத்தான் அப்படி எண்ணினார்கள் போலிருக்கிறது.

குகைக்குள்ளே சுமார் 60 மீட்டர் சென்ற பிறகு ஒரு சிறிய திருப்பம் காணப்பட்டது. தங்கமணி ஆவலோடு அதில் நுழைந்தான், மற்றவர்களையெல்லாம் அங்கேயே நிற்கச் சொல்லிவிட்டு அவன் மட்டும் ஜின்காவோடு அதில் கொஞ்ச தூரம் சென்றான்.

ஆனால் அந்தத் திருப்பத்திற்குமேலே ஒரு மீட்டர் வரைதான் வழி இருந்தது. அத்துடன் குகை முடிந்துவிட்டது. விளக்கைப் போட்டு அவன் துருவித் துருவிப் பார்த்தான். அதற்குமேல் வெறும் பாறைதான் தென்பட்டது.

அவன் திரும்பி வந்து அனைவருக்கும் அந்த உண்மையைச் சொன்னான். எல்லாருடைய உற்சாகமும் திடீரென்று மங்கிவிட்டது.

“அந்தப் பூசாரி எல்லாரையும் ஏமாற்றிப் பணம் பறிக்கிறான். சுரங்கப் பாதையென்று காட்டு மாரியம்மன் சிலைக்குப் பின்னால் இரண்டு மூன்று படிகளைக் காட்டிப் பணம் சம்பாதிக்கும் எத்தன் அவன்” என்றான் சுந்தரம்.

“நான் அப்பவே நினைத்தேன்” என்றாள் கண்ணகி.

“நினைத்து என்ன செய்கிறது? சொல்லியிருக்க வேண்டாமா?” என்று கோபித்துக் கொண்டான் சுந்தரம்.

“அவனுடைய கொடுவாள் மீசையைப் பார்த்து நான் பயந்து விட்டேன்” என்று விளக்கம் தந்தாள் கண்ணகி.

“சரி, குகைக்குள் இருந்துகொண்டே பேசினால் எதிரொலிக் குழப்பம்தான் காதில் விழுகிறது. முதலில் வெளியே போவோம். போகும்போது மற்றொரு தடவை குகையின் பாறைச் சுவர்களை நன்றாகப் பார்த்து விடுவோம்” என்று தங்கமணி கூறினான்.

“புதையல் எல்லாம் வெறும் கதை. கண்ணகிக்கு வைர மூக்குத்தி போச்சு” என்றான் சுந்தரம்.

“போடா அசடு – இந்தக் காலத்திலே யார் மூக்குத்தி போடுகிறார்கள்? அதிகமாக நகை அணிந்து கொள்வதே அநாகரிகம் – அதோடு புதையல் கிடைத்தால் அது அரசாங்கத்திற்குச் சேரவேண்டியது. நீயே வைத்துக் கொள்ளலாம் என்று நினைக்காதே” என்று கண்ணகி முடிப்பதற்கு முன்னே “ஒரு குட்டிப் பிரசங்கமே செய்துவிட்டாய். புதுமைப் பெண் வாழ்க” என்றான் சுந்தரம். தங்கமணி இவர்களுடைய பேச்சையெல்லாம் காதில் போட்டுக் கொள்ளவே இல்லை. அவன் டார்ச் விளக்கைப் போட்டு இரண்டு பக்கத்திலுமுள்ள குகையின் பாறைச் சுவர்களை கூர்ந்து கவனித்துக் கொண்டே வந்தான். சில இடங்களில் அங்கே கிடந்த சிறு கல்லைக் கொண்டு கீறிப் பார்த்தான்; தட்டித் தட்டியும் பார்த்தான்.

ஓரிடத்திலே பாறையிலே செங்கல் சுவர் வைத்திருந்தது. அதுவும் பாறையோடு பாறையாய் ஒரே கருப்பாகத் தோன்றினாலும் செங்கல் என்பதைத் தங்கமணி கண்டு கொண்டான்.

“இங்கே பார். இங்கே எதற்குச் செங்கல் சுவர் வைத்திருக்கிறார்கள்?” என்று தங்கமணி தன் உள்ளத்தில் தோன்றிய சந்தேகத்தை வெளிப்படையாகப் பேசினான்.

“திப்புசுல்தானைக் கேள்” என்றான் சுந்தரம்.

“அடடா இன்னும் ஒரு பெரிய ஜோக்” என்று கண்ணகி நகைத்தாள். தங்கமணி “சுந்தரம், கட்டப்பாறை இருக்கிறதா? இதை நாம் ஆராய்ந்து பார்க்க வேணும்” என்று ஏதோ ஆழ்ந்த யோசனையோடு கேட்டான்.

சுந்தரம் தன் கேலிப் பேச்சையெல்லாம் விட்டு விட்டுக் காரியத்தில் இறங்கினான். “கட்டப்பாறை இங்கு எப்படிக் கிடைக்கும்? நாம் ஊன்றி நடப்பதற்காகக் கொண்டுவந்த கெட்டிபான கல் மூங்கில் கழி இருக்கிறது. அது உபயோகப்படுமா என்று பார்ப்போம்” என்று கூறிவிட்டுத் தங்கமணி காட்டிய செங்கல் சுவரை இடிக்க முயன்றாள்.

“அண்ணா , இங்கே ஒரு கல் கிடக்கிறது. அதைக் கொண்டு சுவரை இடிக்கலாமா பார்” என்றாள் கண்ணகி.

தங்கமணி அந்தக் கல்லைக் கொண்டு சுவற்றின் மேல் ஓங்கி ஓங்கி போட்டான். சுந்தரம் மூங்கிற்கழியால் குத்தினான்.

இருவருடைய முயற்சியால் செங்கல் சுவரின் கொஞ்சங் கொஞ்சமாகப் பிளவு உண்டாயிற்று. அந்தப் பிளவுக்குள்ளே, மூன்று மூங்கில் குச்சிகளையும் ஒன்றாகப் புகுத்தி நெம்புகோல் போலப் பயன்படுத்தி மூவரும் சேர்ந்து நெம்பினார்கள்.

செங்கல் சுவர் சுமார் அரை மீட்டர் அகலமிருக்கும். அது பெயர்ந்து தடாலென்று கீழே விழுந்தது.

நல்ல வேளை, மூவரும் குகையின் உள் பக்கத்தில் இருந்தார்கள். அதனால் அவர்கள் மேல் அது



விழவில்லை. ஜின்கா மட்டும் மறுபக்கத்தில் நின்று இவர்கள் செய்வதை உன்னிப்பாகப் பார்த்துக்கொண்டிருந்தது. சுவர் விழும்போது அது ஒரு தாவுத் தாவித் தப்பிக் கொண்டது.

“ஜின்கா, நீ சுவரின் அடியில் அகப்பட்டிருந்தால் சட்னி ஆகியிருப்பாய். தங்கமணி உயிரையே விட்டிடுவான்” என்று கூவினான் சுந்தரம். அதே வார்த்தைகளை குகை பல முறை எதிரொலித்தது.

மூவரும் சுவருக்குப் பின்னால் என்ன இருக்கிறது. என்று ஆவலோடு பார்த்தார்கள். அங்கே ஒரு சிறிய குகை தென்பட்டது. தங்கமணி டார்ச் விளக்கை உள்ளே காண்பித்தான்.

அதை ஒரு சிறிய குகைபோலக் குடைந்து வைத்திருக்கிறார்கள். அதற்குள்ளே பெட்டி ஒன்று காணப்பட்டது. அந்தக் குகைக்குள்ளே யாரும் நுழைய முடியாது. அவ்வளவு சிறியது அது.

“ஜின்கா” என்று கூப்பிட்டுத் தங்கமணி ஏதோ சமிக்ஞை செய்தான். உடனே ஜின்கா உள்ளே புகுந்து அந்தப் பெட்டியைத் தூக்கி வந்தது.

“இதில் ஏதோ ரகசியம் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் இப்படிப் பாறையைக் குடைந்து அதற்குள் பெட்டியை வைத்துப் பிறகு எதற்காகச் செங்கல் சுவர் வைக்கிறார்கள்?” என்று தங்கமணி யோசனையோடு சொன்னான்.

“அதில்தான் புதையல் இருக்குமோ?” என்று சுந்தரம் கேட்டான்.

“புதையலாக இருக்க முடியாது. அப்படி இருந்தால் ஜின்காவால் அதை இவ்வளவு சுலபமாகத் தூக்கிக் கொண்டு வர முடியாது.” என்று தங்கமணி சொன்னான்.

பெட்டியைக் கண்டதும் மூவருக்கும் ஒரே உற்சாகம் ஏற்பட்டு விட்டது. அவர்கள் உற்சாகத்தைக் கண்டு ஜின்கா குதிக்கத் தொடங்கிற்று.

“நாம் பாட்டி வீட்டுக்குப் போய் இந்தப் பெட்டியைத் திறந்து பார்ப்போம்” என்று கூறிவிட்டுத் தங்கமணி அவசரம் அவசரமாகப் புறப்பட்டான்.

– தொடரும்...



தர்மபுரி மேற்கு மாவட்ட தி.மு கழக செயலாளரும் உயர்கல்வித்துறை முன்னாள் அமைச்சருமான முனைவர். பெ. பழனியப்பன் அவர்களின் புதல்வன் பா.எழில் மறவன் – ச. கிருத்திகா மணவிழா 14.12.2025 அன்று பாப்பிரெட்டிப்பட்டியில் நடைபெற்றது. மணமக்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்திய காட்சி!



சங்கத் தலைவர் அவர்களின் மகன் செ. சக்திக்குமரன் – டாக்டர் பரணி திருமண வரவேற்பு விழாவில் மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் திரு.சு.முத்துசாமி அவர்கள், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கே.இ.பிரகாஷ் அவர்கள், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.வி.சி. சந்திரகுமார் அவர்கள் வாழ்த்தும் காட்சி!



# விழித்தெழு! முயன்றிடு!! வென்றிடு

தன்னம்பிக்கைத் தொடர்

03

## உழைப்பை விதையுங்கள்...

விதைக்காமல் விளைச்சல் இல்லை, உழைக்காமல் உயர்வில்லை. அதுபோல முயற்சிக்காமல் முன்னேற்றம் இல்லை. ஆகவே தொடர்ந்து முயற்சியை முதலீடு செய்து கொண்டே இருங்கள். முயற்சிகள் சிதறாமல், முனைப்புடன் ஏற்றுக்கொண்ட பொறுப்பில் முதலீடு செய்தால், அம்முயற்சிகள் வெற்றிகளைப் பெற்றுத்தரும். எல்லாம் முயற்சிகளும் வெற்றி அடையும் என்று சொல்ல முடியாது என்றாலும் முயற்சிக்காமல் யாரும் வென்றதில்லை. அதாவது முன்னேற்றத்திற்கு முயற்சியே மூலதனம் என்பதை மனதில் பதிய வைத்துக் கொள்ளுங்கள்.

"ஆயிரம் முறை தோற்றாலும் இன்னொரு முறை முயன்று பாருங்கள்"என்கிறார் சுவாமி விவேகானந்தர். மேலும் "முயற்சிகள் வென்றால் நீங்கள் வழி நடத்தும் தலைமை ஏற்கலாம்; முயற்சிகள் தோற்றால் உயர்வோருக்குப் பயிற்சி கொடுக்கலாம்" என்றும் கூறுகிறார். பெரிய இலக்குகளையும் எளிதில் அடைய முடியும். எவ்வாறு சிற்றுளியால் பெரும் பாறையையும் தகர்க்க முடிகிறதோ! அதுபோல சிறு முயற்சி தான் என்றாலும் அது தொடர் முயற்சியாக இருந்தால் எவ்வளவு பெரிய இலக்கையும் எளிதில் அடைந்து வெல்ல முடியும். நிறையப் பேர் முயற்சிப்பார்கள், ஆனால் அது தொடர் முயற்சியாக இருக்காது. மேலும் ஆரம்பத்தில் இருந்த உத்வேகமும் உற்சாகமும் மெல்ல மெல்லக் குறைந்து சலிப்பும், விரத்தியும் ஏற்பட்டுவிடும். அதன் காரணமாக அம்முயற்சியை பாதியிலேயே விட்டுவிடுவார்கள். அத்தகையோரால் எந்த காரியத்தையும் செய்து முடிக்க முடியாது.

"பெரிதினும் பெரிது கேள்"என்றார் மகாகவி பாரதி. உங்களுடைய சக்திக்கும் ஆற்றலுக்கும் எது முடியுமோ அதைவிட பெரிதான ஒரு இலக்கை நிர்ணயித்துக்கொள்ளுங்கள். பிறகு அதை அடைவதற்கான செயல் திட்டத்தை

உருவாக்கிக் கொள்ளுங்கள். பிறகு உங்களுடைய செயல் திட்டத்தை மறுமதிப்பீடு செய்து நிறைவான திட்டத்தை உருவாக்கிக் கொள்ளுங்கள். இதைத்தான் வள்ளுவப் பெருந்தகை

"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு"

குறள் எண்: 467

என்கிறார். அதாவது ஒன்றைத் தொடங்கும் முன்னர் அது குறித்து எல்லா நிலைகளிலும் தெளிவாகச் சிந்தித்து திட்டம் தீட்டிக்கொள்ள வேண்டும்.

அவ்வாறு தெளிவான திட்டத்தை உருவாக்கிய பின்னர் துணிந்து உத்வேகத்துடனும் முழு நம்பிக்கையுடனும் செயலாற்றத் தொடங்க வேண்டும். அவ்வாறில்லாமல் அறையும் குறையுமாகச் சிந்தித்து தெளிவற்ற திட்டத்தை உருவாக்கிக் கொண்டு, பாதி இலக்கை அடைந்ததும், ஏன் இவ்வாறு செய்தோம்? என்று எண்ணி அதைக் கை விடுவது தோல்விக்குத் தான் வழி வகுக்கும் என்கிறார்.

ஆகவே தெளிவான சிந்தனையும் நிறைவான திட்டமும் உறுதியான முயற்சியும் வெற்றிகளை அள்ளிக் குவிக்கும் என்பது உறுதி.

உங்களுடைய முழுக் கவனத்தையும் முயற்சியில் செலுத்த வேண்டும். கடினமாக உழைப்பவர்களைவிட கவனமாக உழைப்பவர்களே முன்னேறுகிறார்கள்.அதுபோல கவனமாகவும் நுட்பமாகவும் முயல்பவர்களே முதன்மை பெறுகிறார்கள்.

மேலும் நீங்கள் வெற்றி பெறுவதற்கு ஒருபோதும் மற்றவர்களைத் தோற்கடிக்க வேண்டிய அவசியமில்லை. ஒருவேளை மற்றவர்களைத் தோற்கடித்து வென்றாலும் அது நிலையான வெற்றியாக நிலைத்திருப்பதுமில்லை. மாறாக உங்களை நீங்களே தோற்கடிக்க முயற்சிக்க வேண்டும். அது எவ்வாறு நம்மை நாமே தோற்கடிப்பது என்று தானே கேட்கிறீர்கள்? நேற்றைய கவிதாசனை விட இன்றைய கவிதாசன் சிறந்திருக்க வேண்டும். இன்றைய கவிதாசனை விட நாளைய கவிதாசன் உயர்ந்திருக்க வேண்டும் என்ற சிந்தனையுடனும் முனைப்புடனும் தான் நான் செயல்படுகிறேன். அதன் மூலமாக நான் ஒவ்வொரு நாளும் முன்னேற்றத்தின் திசை நோக்கி செயல்பட்டு வருகிறேன்.

எடுத்துக்காட்டாக, படிக்கும் ஒரு மாணவன் ஒவ்வொரு தேர்விலும் அதற்கு முந்தைய தேர்வில் பெற்ற மதிப்பெண்களை விட ஐந்து மதிப்பெண்களாவது கூடுதலாக வாங்க வேண்டும் என்ற இலக்குடன் படித்தால் அது எளிதில் சாத்தியமாகாதா? அவ்வாறே ஒவ்வொரு தேர்விலும் முயற்சி செய்தால் உச்சியை தொட முடியாதா? சற்று எண்ணிப் பாருங்கள்! இதன் உண்மை புரியும்.

நம்மை நாமே உயர்த்திக் கொள்வதற்கு கூடுதல் உழைப்பும் முயற்சியும் வேண்டும். அவ்வாறான கூடுதல் முயற்சியில் முடியாதது ஒன்றுமில்லை என்பதை முயற்சிக்க முயற்சிக்க நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள். முயற்சியின் வேர்கள் கசப்பானவை என்றாலும் அதன் கனிகள் மிகவும் சுவையானவை என்பதை உணர்ந்து முயற்சித்துக் கொண்டே இருங்கள். வெற்றியின் வெளிச்சத்தை எளிதில் தரிசிக்கலாம்.

எல்லா மரங்களும் ஒரு காலத்தில் சிறு செடியாகத் தான் இருந்தன. எல்லா ஆசிரியர்களும் ஒரு காலத்தில் மாணவர்களாகத் தான் இருந்தார்கள். எல்லா மேதைகளும் ஒரு காலத்தில் பேதைகளாகத்தான் இருந்தனர். எல்லா ஓவியங்களும் ஒரு புள்ளியில் இருந்துதான் தொடங்குகின்றன. எல்லா காவியங்களும் ஒரு எழுத்தில் இருந்து தான் தொடங்குகின்றன.

அதுபோல மாபெரும் சாதனையும் சிறு முயற்சியில் இருந்துதான் தொடங்குகிறது என்ற உண்மையை புரிந்து கொண்டு முயற்சியை முதலீடு செய்வதற்கும், தொடர்ந்து முயல்வதற்கும் உறுதி எடுத்துச் செயல்படத் தொடங்குங்கள். வெற்றி உங்களைத் தேடி வரும்!

"தொடும் வரை தான் சிகரம்
தொட்டபின்பு நீ தான் உயரம்"

–மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

# வெற்றித் தரும் தலைமை பண்புகள்



சுயநலத்தின் நிழல் கூட படாத புனிதமானவர்களால் மட்டுமே தலைமைப் பண்புக்கு மகுடம் சூட்ட முடியும்!



தலைமை என்பது பதவியல்ல! பொறுப்புள்ள செயல்பாடு.

சவால்களுக்கு சவால் விடும் தன்னம்பிக்கையின் வெளிப்பாடு!



இலக்கின் மீது கவனக் குவிப்பு இருந்தால் இன்னலை வெல்லும் ஆற்றல் பிறக்கும்.



விவேகமாகவும் வேகமாகவும் செயல்படுவது தலைமைக்கு வலிமை சேர்க்கும்.





மாற்றத்தை ஏற்படுத்தும் துணிவும் மாசில்லாப் பணிவும் தலைமையின் வெற்றிக்கு வித்திடும்.



வழித்தோன்றல்களை உருவாக்கும் வல்லமை படைத்த தலைவர்களே எதிர்காலத்திற்கு ஒளியாகிறார்கள்!



எத்தனை நிபந்தனைகள் வந்தாலும் நேர்மையான முடிவுகளை எடுக்கும் ஆற்றல் மிக்க தலைமைக்கு உலகம் தலை வணங்கும்.



முன்னேற்ற முயற்சிகளுக்கு சிந்தனையையும் செயலையும் சிறகுகள் ஆக்குவதே தலைமையின் தனிச்சிறப்பு!



கருத்து வேறுபாடுகளைக் கையாளுவதும் ஒரு கலை. மாற்றுக் கருத்துக்களின் மகிமையை உணராத தலைமை, முன்னேற்றத்தின் முகவரியைத் தொலைத்து விடும்.



– சிந்தனைக் கவிஞர் கவிதாசன்



பால்வளத் தந்தை
எஸ் கே பரமசிவன் அவர்களின்
திருஉருவச் சிலையை திறந்து
வைத்து அவரது
திருவுருவப்படத்திற்கு மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு மு.க.ஸ்டாலின் அவர்கள்,
மாண்புமிகு வீட்டு வசதி துறை
அமைச்சர் திரு சு.முத்துசாமி
அவர்கள்,
மாண்புமிகு செய்தி மக்கள் தொடர்பு
துறை அமைச்சர்
திரு மு .பெ. சாமிநாதன் அவர்கள்
மரியாதை செலுத்தும் காட்சி! உடன்
மாண்புமிகு பால்வளத்துறை
அமைச்சர் அவர்களும், ஈரோடு
மாவட்ட ஆட்சித்தலைவர்
அவர்களும்




KRISHYA
WE ARE EXCLUSIVELY AVAILABLE AT REPUTED RETAIL STORES ACROSS TAMILNADU.
WE CATER TO WHOLESALE ORDERS ONLY
• Casual Kurtis
• Co-ord sets
• Salwar sets
• Maternity wear
• R.K FABS, No. 76, Sankari Bye-pass road, near Ottanmethai, Agraharam (PO), Pallipalayam, Erode-638008.
• 4+91 9789973128
• rkfabsppm@gmail.com

# ஒரு எளிய மனிதனின் நெடும் பயணம்

தற்போதைய நாமக்கல் மாவட்டம் கோக்களை கிராமம், நெய்க்காரன் பாளையம் என்ற சிற்றூரில், திரு செங்கோட கவுண்டர் சின்னம்மாள் தம்பதியருக்கு கடைக்குட்டி மகனாக 13.12.1935 அன்று திரு. அருணாச்சலம் அவர்கள் பிறந்தார்.

இவரது உடன் பிறந்தோர் திரு. பழனியப்ப கவுண்டர், திரு. ரங்கசாமி கவுண்டர் திரு ராமசாமி கவுண்டர் ஆகியோர் ஆவர்.

## அன்று

இவர் பிறந்த கிராமம் அன்று பசுமை நிறைந்து எங்கும் மரங்களும், செடிகளும் நிறைந்திருந்தன. ஒவ்வொரு விவசாயியும் ஒரு குட்டையும், கிராமந்தோறும் இரண்டு அல்லது மூன்று ஏரிகளும் இருந்தன. கிணற்றில் 25 அடி ஆழத்தில் தண்ணீர் விவசாயத்திற்கு போதுமான அளவு இருக்கும். ஒவ்வொரு விவசாயம் அவர்களுக்கு இருந்த நிலத்தில் பாதிக்கு குறைவாகவே விவசாயம் செய்து வந்தார்கள். மீதி நிலங்கள் ஆடு மற்றும் மாடுகள் மேயும் நிலமாக பயன்பட்டு வந்தது. ஆனால் இன்றோ 1300 அடி போர்வெல் போட்டும் குடிப்பதற்கு கூட தண்ணீர் பற்றாக்குறை. அனைத்து மரம், செடிகளும் காய்ந்து பாலைவனம் போல் அப்பகுதி கிராமங்கள் காட்சியளிக்கின்றன.

## கல்வி

அவர் தனது ஆரம்பக் கல்வியை ஐந்தாம் வகுப்பு வரை 4 கிலோ மீட்டர் தொலைவில் இளையாம்பாளையம் என்ற ஊரில் உள்ள அரசு பள்ளியிலும், ஆறாம் மற்றும் ஏழாம் வகுப்பு படிப்பை எட்டு கிலோமீட்டர் தொலைவில் உள்ள வையப்பமலை என்ற ஊரில் உள்ள நடுநிலை அரசு பள்ளியிலும் நடந்தே சென்று படித்தார்.

இவர் படித்த ஆரம்ப பள்ளி ஆசிரியர், திரு. செல்லப்பிள்ளை மற்றும் திரு. கந்தசாமி ஆகிய இருவரும், மாணவர்கள் மனதில் அழுத்தமாக பதியும் வகையில், கல்வியின் அவசியத்தையும், ஒழுக்கத்தையும் மற்றும் மாமிச உணவை சாப்பிட வேண்டாம் என்ற உணர்வை அழுத்தமாக உணர வைத்ததின் காரணமாக இன்று வரை சைவ உணவே உண்ணுகிறேன் என்கின்றார். மேலும் அந்த ஆசிரியர்கள்



கொடுத்த அறிவுரையே மேலும் படிக்க தூண்டுதலாக இருந்தது என்று மனமுருக நெகிழ்வுடன் கூறுகின்றார்.

அந்தக் காலகட்டத்தில் அதாவது 1951 இல் உயர்நிலை பள்ளிகள் 30 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள திருச்செங்கோட்டில் அல்லது ராசிபுரம் தவிர பக்கமாக உயர்நிலைப் பள்ளிகள் எங்கும் கிடையாது. ஆகவே தனது படிப்பை திருச்செங்கோட்டில் உள்ள மகாதேவ வித்தியாலையம் என்ற பள்ளியில் 8 ஆம் வகுப்பையும் மற்றும் 9, 10, 11, ஆம் படிப்பை அரசு உயர்நிலைப் பள்ளியிலும் 1955 ஆம் ஆண்டு படித்து முடித்தார்.

பள்ளிப் படிப்பிற்கு பின் கோவையில் உள்ள கவர்மெண்ட் பாலிடெக்னிக்கில் L.A.E (Licenced Agri Engineering) என்ற 3 ஆண்டு படிப்பையும் பின் அதற்கான அப்ரண்டீஸ் ட்ரைனிங் 1 ஆண்டும் "மத்திய பிரதேசத்தில் "புதினி" என்ற இடத்தில் உள்ள "டிராக்டர் டெஸ்டிங் அண்ட் டிரைனிங் சென்டர்" ல் நிறைவு செய்தார்.

அதன்பின் பாலக்காடு உயர்நிலைப் பள்ளியில் 3 மாதம் Engineering Training ஆசிரியராக பணியாற்றினார். 1961 ஆம் ஆண்டு தனது மாமன் மகள் முத்தம்மாளை 26.06.1961 அன்று வாழ்க்கை துணையாக கைப்பிடித்தார்.

அதே ஆண்டு தமிழ்நாடு விவசாய என்ஜினியரிங் (Tamil Nadu Agricultural Engineering Depart) ல் Junior Engineer பனியில் சேர்ந்தார். தொடர்ந்து 5 ஆண்டுகள் திருவள்ளூர், சேலம், மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் பணி பார்த்தார்.



கோவையில் படித்த பொழுது தொழில் துறையில் அதிக ஈடுபாடு இருந்ததால் பல நூற்பு ஆலைகள், மோட்டார் பம்பு செட் தொழில்சாலைகளை பார்த்து அத்தொழியின் மீது நாட்டம் கொண்டார். இதுவே பிற்காலத்தில் பம்பு செட் வியாபாரமும் பின் சென்னையில் இன்ஜினியரிங் இண்டஸ்ட்ரி யும் ஆரம்பிக்கவும் காரணமாக அமைந்தது.

## வியாபாரம்

தன்னுடைய முதல் வியாபாரத்தை திருச்செங்கோட்டில் 1961ல் தொடங்கினாலும் அதை 3 மாதத்தில் வேறு ஒருவருக்கு ஒப்படைத்துவிட்டு Agricultural Engineering Department ல் வேலையில் சேர வேண்டி ஆயிற்று.

பின் 1964 ல் சேலத்தில் வேலையில் இருந்து கொண்டே "செங்கோட கவுண்டர் & சன்ஸ் என்ற பம்ப் செட் விற்பனை நிறுவனத்தை தனது மைத்துனர் திரு. சுப்பிரமணியம் உதவியுடன் ஆரம்பித்தார். அது சிறப்பாக நடைபெற்றதால் 1965 ஆம் ஆண்டு கவர்மெண்ட் வேலையை ராஜினாமா செய்தார். வியாபாரம் நன்கு நடைபெற்றதால் 1968 ஆம் ஆண்டு தர்மபுரியில் "கவுண்டர் கார்ப்பரேஷன்" என்ற பெயரில் பம்பு செட் வியாபாரம் திரு. நடராசன் என்ற உறவினர் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டது.

அதே காலகட்டத்தில் அவர் உடன்பிறந்த சகோதரியின் மகன்கள், மருமகன்கள் உறவினர்கள் வியாபாரம்

(Training) செய்ய உதவியும், பங்குதாரராகவும், ஆலோசகராகவும் வழிகாட்டியாக உதவியுள்ளார். தனக்கு தெரிந்த வியாபாரம் நுட்பத்தையும் தொழில் அறிவையும் தன் வாழ்நாள் முழுவதும் பலருக்கு உதவியுள்ளார் என்றால் அது மிகையாகாது.

வியாபாரத்தில் தன்னிறைவு அடைந்த போதிலும் கூட இவர் தன் புதிய முயற்சிகளை கைவிடவில்லை. உற்பத்தி துறையின் மீது கொண்ட வேட்கையால் அம்பத்தூர் தொழிற்பேட்டையில் 1971ல் தனது முதல் தொழிற்சாலையை நிறுவினார். இதுவே தொழில்துறையில் இவர் சாதனை புரிவதற்காக போடப்பட்ட அடித்தளமாகும். முதல் ஐந்தாண்டுகள் மிகக் கடினமாக உழைத்த இவர் தனது விடாமுயற்சியால் படிப்படியாக தனது நிறுவனத்தை முன்னேற்ற பாதையில் கொண்டு சென்றார்.

கிராமத்தில் இருந்து சென்னை வந்து தொழில் தொடங்கி இவர் ஆரம்ப காலத்தில் பல சவால்களை



எதிர்கொண்டார். முதல் நிறுவனத்தைத் தொடர்ந்து, இவர் M/s. Auto Wing Industries, M/s. Aruna Pumps Pvt Ltd M/s. Heat Tech Industires, மற்றும் M/s. NU Tech Components போன்ற பல தொழில் கூடங்களை நிறுவினார்.

## குடும்பம்

தொழில் துறையில் முன்னேறிய இவர் தனது குடும்ப வாழ்வில் நிறைவேற்ற வேண்டிய கடமைகளையும் சிறப்பாக செய்தார். 1961 ஆம் ஆண்டு முத்தம்மாள் அவர்களை மனைவியாக கரம் பிடித்த இவரது வாழ்க்கை பயணம் இன்றளவும் உற்சாகத்துடன் தொடர்கின்றது. மகள் காந்திமதி, மகன் நடராஜன் இருவருக்கும் திருமணம் செய்து அவர்கள் வாழ்வில் வழிகாட்டியும் தன் வாழ்நாளை இனிதே நடைபோட்டுக் கொண்டுள்ளார்.



He celebrated his 50th Wedding anniversary in Chennai with his family and friends, His 70th & 80th Birthday was celebrated in Thirukadaiyur with his sons , daughters and grand childrens and family members

## வெளிநாட்டுப் பயணம்

கல்லூரியில் படித்தபோது 1959 ல் Education Tour 20 நாட்கள் வட மாநிலங்களுக்கு பம்பாய், பூனா, மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா போன்ற நகரங்களுக்கு மற்றும் வியாபாரம நிமித்தம், இந்தியா முழுவதும் பலமுறை பயணித்துள்ளார்.

வெளிநாட்டிற்கும் வியாபாரம நிமித்தம், ஜெர்மனி, இங்கிலாந்து, யூஎஸ்ஏ, ஸ்வீடன், இத்தாலி, பிரான்ஸ், ஜப்பான், தாய்லாந்து மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு பலமுறை சென்றுள்ளார்.

தன் மனைவியுடன் ஐரோப்பிய நாடு முழுவதும் சுற்றுலா சென்றுள்ளார்.

## சமுதாயப்பணி

o சென்னை அம்பத்தூர் தொழில்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தில் (Ambattur Industrial Estate Manufacturers Association) பொருளாளராகவும், நிர்வாக கமிட்டியில் பல ஆண்டு உறுப்பினராகவும் செயல்பட்டுள்ளார்.

o கொங்கு நண்பர்கள் சங்கத்தின் நிர்வாக குழு உறுப்பினராக நான்கு ஆண்டுகளும், பின்னர் துணைத் தலைவராகவும், அதன் பின்னர் 1993 - 94 என இரண்டு ஆண்டுகள் தலைவராகவும்

திறம்பட பணியாற்றினார். இவரது காலத்தில் தான் தற்போது மகளிர் இல்லமாக விளங்கும் கொங்குநாடு இல்லம் கட்டி முடிக்கப்பட்டது. முதன்முதலாக சங்கத்திற்கென்று ஒரு கட்டிடம் எழுப்பப்பட்ட பெருமை இவரது தலைமைக் காலத்தில் என்பது பெருமைக்குரிய ஒன்றாகும்.



o அசோசியேசன் ஆப் என்டர்பிரைசிங் எலைட்ஸ் அமைப்பின் நிறுவனத் தலைவர் ஆவார்.

o 1989 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சென்னை கொங்குநாடு அறக்கட்டளையின் நிறுவன அறங்காவலர் ஆவார். அறக்கட்டளையின் பொருளாளராக விளங்கி தற்போது பரங்கி மலையில் அமைந்துள்ள "அருட்செல்வர் மாளிகை" உருவாக உறுதுணையாக இருந்தவர்.

o 2021 முதல் கொங்குநாடு அறக்கட்டளையின் துணைத்தலைவராகவும் இருந்து கொண்டு சீரிய சமுதாயப் பணிகளை ஆற்றி வருகிறார்.

## நம்பிக்கை மற்றும் அனுபவம்

ஆழ்ந்த கடவுள் நம்பிக்கையும் உறுதியான தன்நம்பிக்கையும், ஒழுக்கமும் விடா முயற்சி கொண்ட ஒவ்வொருவரும் கண்டிப்பாக வாழ்வில் முன்னேறுவார்கள் என்று உறுதியாக நம்புகின்றார் இந்த எளிய மனிதர்.




"Constant and Continuos Efforts will Leads to Success."

என்ற செய்தியை ஒரு அமெரிக்கா விஞ்ஞானி மத்திய பிரதேசத்தில் Appertice Training எடுத்தபோது ஆட்டோகிராபில் எழுதிய செய்தி. இன்றும் இந்த செய்தி அவர் மனதில் பசுமையாக நிலைத்து உள்ளது என்று கூறுகின்றார். தனது ஆரம்பப் பள்ளி படிப்பின் போது ஊக்குவித்த ஆசிரியர்களையும், பல்வேறு காலகட்டத்தில் உறுதுணையாகவும் வழிகாட்டியாகவும் உதவியவர்களை நன்றி உணர்வுடன் நாள்தோறும் நினைத்து பார்ப்பதில் தவறுவது இல்லை.

Even in the age of 91 he is hard working, dedicated and willing to learn new things.











05.12.2025 அன்று கர்நாடக தமிழ் பத்திரிக்கையாளர் சங்கம் நடத்திய பெங்களூரு தமிழ் புத்தகத் திருவிழாவை பெங்களூரு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் டாக்டர்.இராம் பிரசாத் மனோகர் இ.ஆ.ப அவர்கள் தலைமையில் இஸ்ரோ தலைவர் டாக்டர் வி.நாராயணன் அவர்கள் தொடங்கி வைத்தார். சங்கத் தலைவர் வீ.க. செல்வக்குமார் அவர்கள் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார்.




எம்.குமாரசாமி பொறியியல் கல்லூரியின் தலைவர் திரு. கு இராமகிருஷ்ணன் அவர்களின் கே.ஆர். குழுமம் நடத்தும் கிரிஷ் டொயோட்டா நிறுவனத்தின் செங்கல்பட்டு கிளை திறப்பு விழா கடந்த 06.12.2025 அன்று வெகு சிறப்பாக நடைபெற்றது.




SUN-X CONCRETE
SUN-X CONCRETE INDIA PVT LTD
CHENNAI
OUR PRODUCTS
READY MIX CONCRETE | SOLID BLOCKS | AAC BLOCKS
AGGREGATE | FLYASH BRICKS
"Ramaniyam Ocean Isha", No11, 6th Floor, Old Mahabalipuram Road,Okkiyam Thoraipakkam,
Chennai - 600 096.
Call : 9003070704 | 9940400050
Email : sales@sunxconcrete.org
www.sunxconcrete.org

# மறதியின் நண்பன் செல்போன்



**பத்மஸ்ரீ கொங்கு மாமணி**
**டாக்டர் வி எஸ் நடராஜன்**
**முதியோர் நல மருத்துவர்**
**சென்னை**

இந்த நூற்றாண்டில் விஞ்ஞானம் வழங்கியுள்ள வினோத படைப்புகளுள் ஒன்று இந்த செல்போன். ஒட்டுமொத்த உலகையும் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததில் அதற்கு நிகர் அதுவே. எதையுமே, நினைவில் வைத்துக் கொள்ள வேண்டாம் என்ற நிலை உருவாகிவிட்டது ஒருவருக்கு அவருடைய செல்போன் எண்ணைத் தவிர, எதுவுமே ஞாபகத்தில் இருப்பதில்லை. அவருடைய மனைவியின் செல்போன் எண்ணைக் கேட்டால் கூட,' எனக்குத் தெரியாது சற்று பொறுங்கள். எனது செல்போனைப் பார்த்துச் சொல்கிறேன்' என்றுதான் பதில் வரும். பட்டனைத் தொட்டாலே போதும் அதுவே எல்லாவற்றையும் தந்துவிடும்.

உலக அளவில் இந்தியா தான் செல்போன் பயன்பாட்டில், முன்னணியில் உள்ளது. தகவல் தொடர்பு விரைவாக கிடைப்பதால் அதை உபயோகிப்போரின் எண்ணிக்கையும் மிகவும் அதிகமாகிக் கொண்டே போகின்றது. நினைவாற்றல் நன்றாக இருக்க வேண்டும் என்று நினைக்கும் யாரும் தன் மூளைக்கு ஏதாவது ஒரு வேலையைக் கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும்.

அதிக ஓய்வு கொடுத்தால் எந்த ஓர் உறுப்பும் துருப்பிடிக்க ஆரம்பித்து விடும் (Rest leads to rust). உடலளவிலும், மனதளவிலும் ஏதாவது ஒரு வேலையைச் செய்து கொண்டே இருந்தால் மூளையும் மிகவும் சுறுசுறுப்பாக இருக்கும். மூளைக்கு எந்த வேலையும் கொடுக்காமல் இருந்தால் அதன் செல்கள் அழியத் தொடங்கிவிடும். அதன் விளைவு மறதியில் தொடங்கி நாளடைவில் அது டிமென்சியா ஆகவும் மாறலாம் அதற்கு துணை போவது தான் செல்போன்.

செல்போன் எந்த அளவுக்கு உபயோகிக்கிறோமோ, அந்த அளவுக்கு மூளைக்கு வேலை குறைகிறது. மூளைக்கு வேலை குறையக் குறைய நாளடைவில் மறதி நோய் வரலாம் என்பது ஒரு கருத்து.

'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷம்'. ஆம், இது செல்போன் விஷயத்தில் மிகவும் பொருத்தமானது. செல்போனில் ஏராளமான நன்மைகள் இருந்த போதிலும், கண்ணுக்குத் தெரியாத சில பாதிப்புகளும் உள்ளன என்பதை மறுக்கவோ மறக்கவோ முடியாது. உலக சுகாதார அமைப்பின் ஓர் அங்கமான, சர்வதேச புற்றுநோய் ஆராய்ச்சி மையம், செல்போன்களின் பயன்பாட்டின்

விளைவுகளைக் குறித்து விரிவான ஆய்வு நடத்தியது. அந்த ஆய்வில், செல்போன்களில் தொடர்ச்சியாக அதிக நேரம் பேசுபவர்களுக்கு மூளையில் புற்றுநோய் கட்டி உருவாகும் அபாயம் உள்ளது என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. செவிகளில் உள்ள நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்டு, காதுகளின் கேட்கும் செயல் திறனும் குறைவதாகத் தெரிவித்து இருக்கிறார்கள்.

செல்போனில் இருந்து வெளிப்படும் கதிர்வீச்சால் தலைவலி தூக்கமின்மை, ஞாபகம் மறதி, சோர்வு, மூட்டு வலி, விந்தணு பாதிப்பு போன்றவை ஏற்படும் என ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

சுறுசுறுப்பாக செயல்படும் மூளைக்கு, செல்போன் மூலம் ஓய்வு கொடுத்தால் அதன் விளைவு மறதியில் போய்தான் முடியும். செல்போன் மூலம் சுகம் பெறுபவர்கள், நாளடைவில் மறதியின் சுமையை அனுபவிக்கப் போகிறார்கள் என்பது அவர்களுக்கே தெரியாது!

கம்ப்யூட்டரும், மனிதனின் மூளையைப் பாதிக்கக் கூடியதே. கம்ப்யூட்டரும், செல்போனும் நமக்கு அறுபது வயதில் வர வேண்டிய ஞாபக மறதியை, இருபது வயதிலேயே வரவைத்து விட்டன!

எனவே, செல்போனை பயன்படுத்துவதில் கொஞ்சம் எச்சரிக்கையாகவே இருப்போம். அளவோடு பயன்படுத்தி நலமோடு வாழ்வோம்!



**உழைப்பு மட்டுமே ஒருவரை முன்னேற்றாது.**

**சுற்றியுள்ளவர்களின் ஒத்துழைப்பு வேண்டும்.**

**ஒத்துழைப்பு பெறுவதற்கு நல்ல அணுகுமுறை அவசியம்!!**

– சிந்தனைக் கவிஞர் கவிதாசன்



சமீபத்தில், நவம்பர் 2025-ல், தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின், மூத்த நடிகர் சிவகுமாருக்கு மதிப்புறு முனைவர் பட்டம் (Honorary Doctorate) வழங்கி கௌரவித்தார்; இந்த நிகழ்வு, டாக்டர் ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் நடைபெற்றது, ஸ்டாலின் சிவகுமாரை நடிகர் மற்றும் ஓவியர் எனப் பாராட்டி, கலைஞருக்கு நெருக்கமானவர் என்றும் குறிப்பிட்டார்

# வாழ்த்துகிறோம்



தமிழ் சினிமாவில் புகழ்பெற்ற மூத்தநடிகரும்,
கொங்கு சமுதாயத்தின் பெருமைக்குரிய
திரு சிவகுமார் அவர்களுக்கு கடந்த மாதம்
தமிழக முதல்வர் திரு.மு.க. ஸ்டாலின்
அவர்களால் மதிப்புறு முனைவர் பட்டம்
வழங்கப்பட்டது.

இந்த இனிய நிகழ்வில் நமது
கொங்கு சொந்தங்கள்
அமைச்சர் திரு. மு. பெ. சாமிநாதன்
ராம்ராஜ் கே ஆர் நாகராஜன்
பரணி கே பாலசுப்பிரமணி
என் டி சி கே சந்திரமோகன்
தங்கள் வாழ்த்துக்களை தெரிவித்து
கௌரவித்தனர்




## கொங்கு கலை & அறிவியல் கல்லூரியில் வீரர்களுக்கு பாராட்டு விழா

ஓசூரில் நடைபெற்ற 72–ஆவது தமிழ்நாடு மாநில சீனியர் கபடி சாம்பியன்ஷிப் போட்டியில் கரூர் மாவட்ட கபடி அணி மிகச்சிறப்பாக விளையாடி, மாநிலம் முழுவதும் இருந்து பங்கேற்ற 37 மாவட்ட அணிகளை வென்றும், சாம்பியன் பட்டத்தை கைப்பற்றி வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

இந்த பெருமைமிகு சாதனையை கொண்டாடும் விதமாக கரூர் கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நேற்று பாராட்டு விழா நடைபெற்றது.

விழாவின் சிறப்பு விருந்தினராக கொங்கு கல்வி அறக்கட்டளையின் தலைவர் அட்லஸ் எம். நாச்சிமுத்து அவர்கள் பங்கேற்று, மாநில சாம்பியன் பட்டத்தை வென்ற கரூர் வீரர்களுக்கு பரிசுகளையும் பாராட்டுகளையும் வழங்கினார்.




26.11.2025 அன்று அரச்சலூர் ஓடாநிலையில் உள்ள தீரன் சின்னமலை திருவுருவச் சிலைக்கு மரியாதை செலுத்தினேன்! ஒப்பற்ற விடுதலைப் போராட்டவீரர்களைப் பெற்றிருக்கும் தியாகபூமிதான் தமிழ்நாடு என்பதைச் சிலர் உணரவேண்டும்!"

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்!

# தெளிதல் !

இனிப்பின் அருமை
கசப்பில் தெரியும்,.

இன்பத்தின் ஆழம்
துன்பத்தில் தெரியும்.

வெற்றியின் மகத்துவம்
தோல்வியால் தெரியும்.

அறிவின் விசாலம்
குருவால் தெரியும்.

உழைப்பின் பலன்கள்
உயர்வில் தெரியும்.

மழையின் அவசியம்
வறட்சியில் தெரியும்.

அன்பின் மாமாட்சிமை
கனிவில் தெரியும்.

அன்னையின் நேசம்
பிரிவில் தெரியும்.

இல்லாள் அருமை
இறப்பில் தெரியும்.

பாரோர் உணர்ந்திடில்
வையம் நிலைக்கும்
ஆலென கிளைக்கும்!

வாழி நலம் சூழ!

– கலாப்ரியன் ( பூபதி )



# நமது கொங்கு வட்டார வழக்கில் விவசாய சம்பந்தமான சில சொற்கள்

தொறப்புக்குச்சி
பொடக்காலி
அண்ணாங்கால்
கொடாப்பு
உருவாஞ்சுருக்கு
பால் பீய்ச்சுதல்
தயிர் சிலுப்புதல்
அட்டாலி ,
சால்பரி
மக்கிலி (மக்கிரி )
கொத்து
மொளக்குச்சி
சாளை
கடவுப்படல்
தடுக்கு
தட்டக்கூடை
வால்கவுறு
கவலை(ளை)யோட்டுதல்

தரம்பு கட்டுதல்
கொடுவாள்
கருக்கருவாள்
களத்துமேடு
பாம்பேரி
பெருக்கான்
முட்டுவழி
தொக்கடா
வெள்ளதாரை
தரம்புகட்டை
ஒண்டுகவை
மொகரப்பூட்டு
மரக்கால்
தும்மி
சாடு
குடுதாழி
ராக்கூடை
வாக்கூடை

தார்க்கோல்
மொளக்குச்சி
நாச்சோறு
ஒதுக்குபடல்

பொங்கச் சருவம்
தூக்குப் போசி...
சப்பாரம்
மாடகுழி ( விளக்கு ஏற்றுமிடம்)
கடவு( நுழைவு வாயில்)
ரஸ்தா ( பாதை)
கொறங்காடு
அம்புளி ( சோளத்தை இடித்து ஊற வைத்து செக்குல ஆட்டி இரவு புளிக்க வைத்து காலையில் காச்சப்படும் கூழ்)
ஆணம் (கொழம்பு )
கற சோறு
மொசல் ( முயல்)

வைக்கப்பில் (வைக்கோல்புள்ளு)
சோளத்தட்டு (தீவனம்)
மொளவு (கறிக்குழம்புக்கு சேர்க்கும் மசாலா)
மொறம்.
மக்கரி
தலமாறு (ஏரு திரும்பும் முனை)

அங்கராக்கு ...

தொவயல் (கல்லத் தொ வயல்)

சும்மாடு
திருவ
கரித்துணி
ஊரப்பானை
சருவம்
அண்ணாக்கவுரு

மங்கிலியம்
தட்டம்
கவுட்டி
கவ்வை கோலு (குச்சி)
அணப்பு
பொலி
சலதாரை
பொறக்கடை
பட்டியாளு நேரம்
கோழி கூப்புட
பொழுதோட
வெடியால
பழையசோத்து நேரம்
இரணிய நேரம்
சைனம்
மொதபஸ்
கடைசி வண்டி
பௌசரு (கார்)
சவ்வாரி
நொங்குவண்டி
பல்லுக்குச்சி
ஊறத்தண்ணி
புழுதண்ணி
மத்துக்குச்சி
மத்துக்கோல்
தெரட்டி
மொறச்சீரு
குச்சு
ஒலக்கை
ஒரலு
மேவரம்

கெழவரம்
தெக்கால
வடக்கால
பக்காபடி
முத்திரைப்படி
வள்ளம்
ஒலக்கு
தூத்துக்கூடை
வெதப்பொட்டி
வெஞ்சனம்
மேத்திண்ணை
திண்டு
நட்டடுப்புச் சாம்பல்
இட்டாலி
முக்கிட்டாலி
சீடை கட்டுறது
எறவுத் தண்ணி
கோடாலி கொண்டை
பின் கொசுவம்
அடுக்கு
ஆப்பை
உரி
கொட்டம்
தொண்டுப்பட்டி
மொடகாடு
வாரிக்குழி
ஒரம்பு
கடையோடறது
பொறவு
அக்கட்டால
அங்கிட்டு

இங்கிட்டு
காத்தாட
மேம்போக்கு

சாடு கவை
ஒண்டுக்கட்டை
கம்பரக்கத்தி
சீவக்கட்டை
மேத்திண்ணை
எரவானம்(தாவாரம்)
ரக்கிலி(கீறை)
கொக்கிச் சல்லை
ஒட்டுக் கூடை
கன்னித் தும்பு
தலை கயிறு
வடம்
வால் கயிறு
பாதாள சோதி
தார்க்கறுது
மயிறு கோதி
கோனூசி
அஸ்க்கா
பாம்பேரி
கொடுவாப் பூன்
தாம்புக் கன்னி
கொட்டாப்புடி
மஞ்சி
அவினி
கருக்காம்பட்டை
பனங்கறுக்கு
தொரட்டி

தேங்காத் தொட்டி
நாச்சோத்துக் கும்பம்
உரிக்காக் கொடி
கத்தக்கொடி
முஷ்டக் கொடி
தாதரா
பன்னை
குமுட்டி
தொய்யல்
ஒருக்கட்டத் தொய்யல்
தாருமுள்
தார்க்கருது
மயிருகோதி
மேத்திண்ணை.
எரவாரம்

தேகுசா
பொங்கச் சருவம்
சால்பானை
படிக்கம்
ஆரீக்கல்
ஒல்லு
ஒலக்கை
செக்கு
கொக்கிச்சல்லை
தொண்டுப்பட்டி
கெடாக் குட்டி
பிறவக் குட்டி
காளைக்கன்னு
கெடாரிக் கன்னு.
தொறப்பு

நாதாங்கி

குச்சூடு
மச்சூடு
தொட்டிகட்டு
தலவாசல்
தட்டுக்காரம்
தாட்சான்
ஈட்டாக்குட்டி
ஒலுப்பட்டி
சொரப்புரடை
தூரி

கூட்டாஞ்சோறு
ராட்டை
ஒடக்கா
கூட்டுச்சாறு
பனங்கா
துலுக்கானி சோளம்
குரங்கு பொகீளை

பக்காப்படி
பட்டணரவை
வேப்பெண்ணை கலயம்
கும்பா
சாவக்குஞ்சு வெடைகுஞ்சு
தொலவு
அத்துவானம்

# கொங்கு நாடும் சமணமும்




**முதற்பதிப்பிற்கான அணிந்துரை**

கொங்குநாட்டுத் தொல்லியல், கல்வெட்டு, செப்பேடு, ஓலைச்சுவடி ஆய்வாளர் புலவர் செ.இராசு ஆய்வு செய்து தொகுத்து வெளியிட்டுள்ள 'கொங்குநாடும் சமணமும்' என்ற அரிய நூலைப் படிக்கும் வாய்ப்பைப் பெற்றேன்.

ஈரோட்டில் பள்ளித் தமிழாசிரியராகப் பணியைத் தொடங்கிய அவர் களஆய்வுகள் மூலம் கொங்குநாட்டின் பல்வேறு பண்டைச் சிறப்புகளையும், பழம்பெருமைகளையும் கட்டுரைகள் வாயிலாகவும், நூல்கள் மூலமாகவும் வெளிப்படுத்தியுள்ளார். அவரால் வெளிப்பட்ட கொங்குநாட்டு வரலாற்றுச் செய்திகள் பற்பலவாகும்.

பள்ளிப் பருவத்திலும், தமிழாசிரியராகப் பணி தொடங்கிய காலத்திலும் கொங்குநாட்டுப் பெரும் புலவர் மகாவித்துவான் வேரா. தெய்வசிகாமணிக்கவுண்டர் அவர்களோடு ஏற்பட்ட நெருக்கமான தொடர்பு புலவர் இராசுவின் ஆய்வு வளர்ச்சிக்குப் பெரிதும் காரணமாக இருந்தது.

பள்ளி ஆசிரியராக இருந்த இராசுவைத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டு தொல்லியல் துறையில் பணியில் அமர்த்தியவர் மொழியியல் அறிஞர் டாக்டர் வ.ஐ.சுப்பிரமணியம் அவர்கள் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியேற்ற இராசு இணைப் பேராசிரியர், பேராசிரியர் ஆகப் பதவி உயர்வு பெற்றுத் துறைத்தலைவராகவும் சிறப்புடன் விளங்கினார்.

தமிழ்ப் பல்கலைக்கழகப் பணியில் சேர்ந்தபின் இவரது ஆய்வு படிப்படியாகப் பரந்து, விரிந்தது. தஞ்சை மராட்டியர், இராமநாதபுரம் சேதுபதிகள், புதுக்கோட்டை-அறந்தாங்கித் தொண்டைமான்கள், சிவகங்கை மன்னர்கள், கொங்குச் சமுதாயம் பாளையக்காரர்கள் பற்றிய செப்பேடுகளையும் கல்வெட்டுகளையும் தொகுத்துப் பல நூல்களாக வெளியிட்டார். பல சுவடிப் பதிப்புக்களையும் வெளியிட்டார்.

17,18,19 ஆம் நூற்றாண்டு வரலாற்று முயற்சிகள் கிழக்கிந்தியக் கம்பெனி ஆவணங்களையே பெரும்பாலும் சார்ந்திருந்த நிலை மாறி, உள்நாட்டு ஆவணங்களின் முக்கியத்துவத்தைப் பெரிதும் பின்பற்றப் புலவர் இராசுவின் பல வெளியீடுகளே காரணமாக அமைந்தன. அத்துடன் கொங்குநாட்டின் பல்வேறு ஊர்கள், கோயில்கள், குலங்கள் பற்றிய வரலாற்றுச் செய்திகளைத் தொகுத்துப் பல நூல்களாக வெளியிட்டார். தம்முடைய பட்டறிவின் வாயிலாக மிக விரிவாக ஆய்வு செய்து இப்போது 'கொங்குநாடும் சமணமும்' என்ற நூலை வெளியிட்டுள்ளார்.

கி.மு. 3ஆம் நூற்றாண்டில் சந்திரகுப்தமௌரியன் காலத்தில் கர்நாடகம் வழியாகக் கொங்கு நாட்டில் சமண சமயம் புகுந்து தமிழகம் எங்கும் பரவியது. பின்னர் பல்லவநாட்டிலும், பாண்டிய நாட்டிலும் ஏற்பட்ட சமண எதிர்ப்பு அலையின் காரணமாக அங்கிருந்து வெளியேறிய சமணர்கள், சமணர்களான தலைக்காட்டுக் கங்கர்கள் ஆட்சி புரிந்த கொங்குநாட்டில் தஞ்சமடைந்தனர்.

கொங்குநாட்டில் உள்ள சமணர் தொடர்பான மலைகள், மலைக்குகைகள், சமணக் கோயில்கள், சமணச் சிற்பங்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள், ஓலைப்பட்டயங்கள், கொங்குச் சமணரின் தமிழ்ப்

பணிகள் முதலியவற்றை மிக விரிவாக ஆய்வு செய்து தகுந்த ஆதாரங்களுடன் இந்நூலைப் புலவர் இராசு உருவாக்கியுள்ளார்.

கொல்லாமையையும், புலால் உண்ணாமையையும் உயர் கொள்கைகளாகக் கொண்டிருந்த சமணர்கள் கடுமையான விரதங்களை மேற்கொள்ள முடியாத காரணத்தால் பெண்கள் வீடுபேறு பெற முடியாது என்று கருதினர். இந்நூலில் இவை போன்ற சமணக் கொள்கைகள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

நன்னூல் ஆசிரியர் பவணந்திமுனிவர் தொண்டை நாட்டினரும் அல்லர், கங்க நாட்டினரும் அல்லர். கொங்குநாட்டுச் சீனாபுரத்தினரே என்று நிறுவியுள்ளார். நேமிநாதம், வச்சணந்திமாலை ஆகிய இலக்கணம் பாட்டியல் நூலாசிரியர் குணவீரபண்டிதர் தொண்டை நாட்டுப் பொன் விளைந்த களத்தூர் அல்ல, பொள்ளாச்சி வட்டக் களந்தை என்பது இராசுவின் ஆய்வில் வெளிப்பட்ட உண்மையாகும்.

சீவகசிந்தாமணி ஆசிரியர் திருத்தக்கத்தேவர் பெருவஞ்சியாகிய தாராபுரத்தைச் சேர்ந்தவர் என்பதும், அவரை ஆதரித்த 'பொய்யாமொழி' சத்யவாக்கிய கங்கமன்னன் என்பதையும் தக்க சான்றுகளுடன் நிறுவும் ஆசிரியர் பெருங்கதை, சிலப்பதிகார உரையாசிரியர் பற்றிப் பல புதிய செய்திகளைக் கூறியுள்ளார்.

வரலாற்று ஆசிரியர்கள் எவரும் மிகுதியாகப் பயன்படுத்தாத மக்கென்சி ஆவணங்களை ஆய்வு செய்த இந்நூலாசிரியர் கொங்குநாட்டுச் சமணக் கல்வெட்டுகள் 54ஐத் தேடித் தொகுத்துப் பிற்சேர்க்கையாக மூல பாடத்துடன் தந்துள்ள விதம் நூலுக்கு அணி சேர்க்கிறது.

அறுபதிற்கும் மேற்பட்ட ஒளிப்படங்களும், வரைபடங்களும் இந்நூலில் சேர்க்கப்பட்டிருப்பது மிகவும் சிறப்புக்குரியதாகும்.

சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன்பு கோவைகிழார் சி.எம்.இராமச்சந்திரஞ் செட்டியார் கொங்குநாட்டுச் சமணம் பற்றிய ஆய்வினைத் தொடங்கி வைத்தார். அவர் கூறிய கருத்துக்களை அடிப்படையாக வைத்து மிகவும் விரிவான ஆய்வை மேற்கொண்டு சான்றுகளுடன் இந்நூலைப் புலவர் இராசு உருவாக்கியுள்ளார். கடந்த அறுபது ஆண்டுகால ஆய்வு வளர்ச்சியை இந்நூல் முழுமையாகப் பெற்றுள்ளது.

சமண சமய வரலாறு, கொங்குநாட்டு வரலாறு. தமிழ் இலக்கிய வரலாறு ஆகியவற்றில் பல புதிய அத்தியாயங்களை இந்நூல் படைத்துள்ளது. குறிப்பாகக் கொங்குநாட்டுச் சமண வரலாறு குன்றின் மேலிட்ட விளக்காக ஒளிவீசுகிறது.

ஈரோட்டில் கொங்கு ஆய்வு மையம் அமைத்து வரலாற்றுப் பணி ஆற்றி வரும் புலவர் இராசுவின் பணிகட்கு இந்நூல் பெருமை சேர்க்கிறது.

சமணர்கள் மட்டும் இன்றித் தமிழ் ஆர்வலர்கள் அனைவருக்கும் இந்நூல் பெருவிருந்தாக அமையும் என்பது ஐயமில்லை. இந்த அரிய நூல் ஆங்கிலத்தில் வெளிவந்தால் உலகம் முழுவதும் கொங்குநாட்டின் பெருமை வெளிப்படும்.

இதுபோன்ற பல ஆய்வு நூல்களை இராசு வெளியிட்டுக் கொங்கு நாட்டிற்கும், கொங்கு சமுதாயத்திற்கும், தமிழுக்கும் மேன்மேலும் பணிபுரிய வாழ்த்துகின்றோம்.

சென்னை

23-3-2005

அன்புள்ள,

நா.மகாலிங்கம்


நூல் கிடைக்குமிடம்:

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்.
அம்பத்தூர், சென்னை- 600 098.

Cell: 044 26251968,

26258410, 26241288






**Rooted in the legecy of Amma Nana, I was inspired by the value of hardwork, trust and integrity. With a deep passion for jewelry, I founded Tiyaraa, a brand that blends timeless artistry with modern sophistication.**



# தமிழறிவோம்

## "கல்லுளிமங்கன்" என்றால் என்ன?

கல்+ உளி+ மங்கன்
கல்+ உளி+ மழுங்குதல்

ஒரு கடினமான பாறையை உடைக்க பயன்படுத்தப்படும் உளியின் முனையானது, அடிக்கடி மழுங்கி விடுவது போல்.,

ஒருவனுக்கு எத்தனை முறை சொன்னாலும் புரிந்து கொள்ள முடியாமல் அவன் தன்னுடைய நிலையிலேயே தொடர்ந்து அடி முட்டாளாக இருப்பது

இதற்கு உவமையாக சொல்ல வேண்டும் என்றால் .,
ஒரு விஷயத்தைப் பற்றி, ஒரு செய்தியை நன்றாக அறிந்தவன், எவ்வளவு அவனை துன்புறுத்தினாலும், வயப்படுத்தினாலும், அவனிடமிருந்து அந்த உண்மையை வாங்க முடியாது, அவனை எப்படி கேட்டாலும் எந்த பதிலும் வராது.,

அதாவது கடினமான பாறையை உடைக்க முயலும் உளியானது தனது கூர்மை தன்மையை அடிக்கடி இழந்து விடுவது போல் கேள்வி கேட்டவர்கள்தான், சோர்ந்து மயங்கி விடுவார்கள் என்பதே இதன் பொருள்..!!

அதாவது
**"காளை மாட்டிலிருந்து பால் கறப்பது போல"**

**- மா.வளவன்**

## கொங்கு நண்பர்கள் அசோசியேட்ஸ் LLP

நடத்தும்

# எழுதிங்கள் சீர் திருவிழா

**23.01.2026 - வெள்ளிக்கிழமை (தை மாதம் - 09)**

காலை 6:00 மணி முதல் மாலை 6:00 மணி வரை

**கொங்கு மாளிகை திருமண மண்டபம்,**

**9, செல்லப்பம்பாளையம், சித்தோடு.**

என்ற இடத்தில் நடைபெற உள்ளது

தொடர்புக்கு:

**1597 33233 | 87789 93646 | 93444 43131 | 98428 8666**

**98428 14252 | 98429 33226 | 98427 79522**






நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம்

**ஆன்றாபட்டி கன்னியாகோயில் மேட்டில்** அமைந்துள்ள

# அரசு வேம்பு திருமண விழா

வைகாசி மாதம் 7 ம் தேதி : 21.05.2026 வியாழக்கிழமை அதிகாலை 4 மணி முதல்

இடம் : ஸ்ரீ குமரன் திருமண மண்டபம் சின்னதம்பிபாளையம்

**கொங்குவேளாளர் கவுண்டர்கள் சமுதாய** முறைப்படி எழுதிங்கள் நடைபெறும்

# அரசு வேம்பு திருமண நடைபெறும்

வைகாசி மாதம் 8ம் தேதி : 22.05.2026 வெள்ளிக்கிழமை அதிகாலை 4 மணி முதல்

அரசு வேம்பு திருமணம் நடைபெறும் இடம் : **கன்னியா கோயில் மேடு**

அருமைகாரர் திரு. **K.ரத்தனவேல்** கவுண்டர்

பெரிய சீரகபாடி, செல் : 99421 78520

தார்மகர்தா

செல் : 98429 88738

தொடர்புக்கு

**94432 51415 | 98656 28437 | 85260 80456**

# மணமகள் தேவை

| எண் | பெயர் | கூட்டம் | பிறந்த தேதி, நட்சத்திரம் | கல்வி | தொழில் | பிறந்த இடம் நேரம் | தொடர்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 167 | B.Akash Vijay | கண்ணன் | 24.11.1999 ரோகினி | M.E. (CS) | Akash Instrument India | Chennai 10.05 AM | 94455 06663 94440 28485 |
| 168 | இ. அன்புச் செழியன் | பயிரன் | 23.10.1996 பூரட்டாதி | B.E Economics | E-Commerce Electronics (Self Employed) | Chennai 11.16 AM | 98652 44151 |
| 169 | G.Rahul | மணியன் | 01.08.1991 ரேவதி | B.E | Business | கரூர் 6.52 PM | 98410 92239 98410 55735 |
| 170 | G.Nishanth | பண்ணை | 17.12.1998 அனுசம் | B.Tech, M.S (CS) | IT | ஈரோடு 16.42 PM | 94440 87600 94440 19875 |
| | | | | | | | |
| 171 | R.Kalaivanan | உத்தம | 21.06.1992 சதயம் | B.E, M.E (Civil) | Assistant Professor | தருமபுரி 12.05 PM | 95978 74677 98430 16411 |
| | | | | | | | |
| 172 | V.Dravid | பில்லன் | 31.08.1997 ஆயில்யம் | MBBS, M.D, | Doctor (Ishwarya Hospital) | உடுமலைப்பேட்டை 06.30 AM | 99652 33777 97881 13626 |
| | | | | | | | |
| 173 | Dr.S. Maniraj | பண்ணை | 27.09.1997 ஆயில்யம் | MBBS | Doctor (Govt - Namakkal) | Salem 12.41 PM | 94433 60267 94877 70267 |
| | | | | | | | |
| 174 | S.G.Murali | பில்லன் | 05.05.1998 மகம் | B.E. Mech | Product Marketing Manager. | Chennai 10.35 AM | 98406 19488 |

## திருத்தம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 165 | A. தீபக் | தூரன் | 12.07.1995 பூராடம் | BE.,MS. USA | Supply Chain Analyst<br>USA | Salem 4.43 PM | 94444 18498 76674 76236 |



# மணமகன் தேவை

| எண் | பெயர் | கூட்டம் | பிறந்த தேதி, நட்சத்திரம் | கல்வி | தொழில் | பிறந்த இடம், நேரம் | தொடர்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 147 | R.ரம்யா | விழியன் | 11.2.1993 சித்திரை | B.E. (EEE) | IT Software | Erode 7.09PM | 99520 9234 98650 92150 |
| 154 | K.சங்கவி | பனங்காடை | 9.6.1999 ரேவதி | M.Sc., B.Ed., | Teacher (Chennai) | Salem 11.04 AM | 99523 02325 |
| | | | | | | | |
| 190 | S.K.Thiviya | பண்ணை | 15.10.1996 விசாகம் | B.Tech (Civil) | Senior Data Analyst | சேலம் 03.08 PM | 97891 11199 98427 44552 |
| | | | | | | | |
| 191 | M.P.S. Sahithya | மணியன் | 14.12.2002 ரேவதி | B.Tech (Food Tech) | MNC - Bangalore | சென்னை 4.55 PM | 98404 22858 80083 66449 |
| | | | | | | | |
| 192 | R.Nandhini | காடை | 11.07.1997 அஸ்தம் | B.E. ( CSE ) | IT - Chennai | கரூர் 06.48 PM | 93801 68423 93804 31492 |
| | | | | | | | |
| 193 | R.Ishwarya | பெருங்குடி | 08.07.1999 பரணி | B.E. ( CS ) | IT - Wells Targo ( Bangalore ) | திருச்சிரப்பள்ளி 22.31 PM | 90031 51188 94440 66468 |
| | | | | | | | |
| 194 | S.Pavithra | கண்ணந்தை | 13.11.1999 பூராடம் | B.E, ECE | Software Engineer ( Bangalore ) | சேலம் 07.08 AM | 99409 42434 94891 10629 |
| | | | | | | | |
| 195 | M.Akshaya | ஆந்தை | 13.04.2001 மூலம் | B.E ( ECE ) | Software Engineer | ஈரோடு 08.41 AM | 94897 34244 94898 34244 |
| | | | | | | | |
| 196 | S.Lashmepraba | காரி | 27.08.2002 ரேவதி | B.Com ( CA ) | CA.Finalist ( Internship ) | ஈரோடு 03.07 AM | 98400 88676 94898 34244 |
| | | | | | | | |
| 197 | R.K.Sandhiya | பொருள்தந்த | 10.05.2002 அஸ்வினி | B.E ( EEE ) | Non - IT Assistant Manager ( Karnataka ) | சென்னை 09.59 AM | 98402 45729 98409 46130 |
| | | | | | | | |
| 198 | M.Priyadarshini | பொருள்தந்த | 21.02.1986 புனர்பூசம் | Ph.D ( UK ) | Self Business ( JSP Enviro Pvt Ltd ) | ஈரோடு 7.23 PM | 96888 44808 80561 20646 |

# சென்னை மெட்டெக்ஸ் லேப் பிரைவேட் லிமிடெட்

# CHENNAI METTEX LAB PRIVATE LIMITED®

Mettex
Since 1984

*Where Test Inspires Trust*

**Accreditations | Approvals :**
**ISO 17025 : 2017**
**NABL TC - 5589**

TC-5589

BIS (Bureau of Indian Standards)

FSSAI (Food Safety and Standards Authority of India)

CPCB MoEF (Ministry of Environment, Forest and Climate change)

(AYUSH)

APEDA

EIC (Export Inspection Council of India)

IOPEPC (Indian Oilseeds and Produce Export Promotion Council)

Gafta (Grain and Feed Trade Association)

(Tea Board of India)

GOVERNMENT OF INDIA

## OUR SERVICES

| CHEMICAL | MECHANICAL | BIOLOGICAL | ENVIRONMENTAL | FOOD | WATER |
|---|---|---|---|---|---|
| Metals & Non Metals, Spectro & Wet Analysis, Salt Spray Test, ROHS, Polymer Identification etc., | Tensile, Yield Strength, Elongation, Hardness, Micro/Macro Structure, Vickers Hardness Impact Test, Rubber Test etc., | Food & Agricultural products, Water & PDW, Marine / Aquaculture Products, Animal Food & Feed, Nutritional Supplements, IAQ & Swabs etc., | AAQ Monitoring, IAQ/Fugitive Monitoring, Stack Emission, Noise Level , Effluent & Sewage Water Analysis etc., | Nutrition Label, Shelf Life, Cooked Food, Fruits, Agri, Dairy, Animal Products, Flavours, Pesticides, Meat, Fish & Egg Products etc., | Drinking & Packaged Drinking Water, Raw water, Well & Bore well Water, RO & DM Water, Industrial Water, Waste Water, ETP & STP Water etc., |



- மஞ்சள் கிழங்கில் குர்க்குமின், நிலக்கடலை, வெங்காயம், கறிவேப்பிலை, முருங்கைக்கீரை போன்ற வேளாண் விளை பொருட்களையும் மற்றும் மீன், இறால் இறைச்சி போன்ற உணவுப் பொருட்களையும் ஏற்றுமதி செய்வோருக்குத் தேவையான ஆய்வுகள் செய்து சான்றிதழ் வழங்க APEDA, EIC, FSSAI, AGMARK போன்ற அரசு அமைப்புகளின் அனுமதியும் இங்கிலாந்து (UK) நாட்டின் GAFTA அமைப்பின் அத்தாட்சியும் பெற்ற ஆய்வுக்கூடம்.
- குடிநீர் ஆய்வு IS:10500, IS:14543-ன் படியும் கால்நடை தீவன ஆய்விற்கும் BIS அங்கீகாரம் பெற்ற ஆய்வுக்கூடம்.
- ஆட்டோமொபைல், இன்ஜினியரிங் தொழிலுக்கு தேவையான உலோக, அலோகப் பகுப்பாய்வுகள் இயந்திரவியல் சோதனைகள் செய்து சான்றளிப்பதில் 41 ஆண்டுகளாக முத்திரை பதித்த NABL அங்கீகாரம்பெற்ற ஆய்வுக்கூடம்.
- MoEF அங்கீகாரம் பெற்ற சுற்றுச்சூழல் ஆய்வுக்கூடம்.




SCAN FOR OUR NABL SCOPE

SCAN HERE TO CONTACT US

**பதிவு அலுவலகம் & மைய ஆய்வகம் :**
83, ஜோதி வளாகம், எம்.கே.என்.சாலை, கிண்டி,
சென்னை - 600 032. +91 44 2232 3163, 4217 9490
Mob : 98410 78949, 98411 37087

**கிளை ஆய்வகங்கள் :**
101, பாரதியார் சாலை, திரு.வி.க.தொழிற்பேட்டை,
ஈக்காட்டுத்தாங்கல், சென்னை - 600 097. (TC-17166)

5/1, ஈடிசியா வளாகம், சென்னிமலை சாலை,
ஈரோடு - 638 001. Ph :0424 - 2272282
Mob : +91 9952949222, 89398 72544 (TC-14172)

7-109, ஜவ்வலப்பாலம் சாலை, பீமாவரம் -534204
ஆந்திரப்பிரதேசம். Ph :08816-246784 (TC-16433)

**கிளை அலுவலகங்கள் :**
மும்பை - +91 89398 72540
பாண்டிச்சேரி - +91 95512 50027
பெங்களூரு - +91 89399 90282
கோயம்புத்தூர் - +91 98410 53041

**மாதிரி சேகரிக்கும் மையங்கள் :**
குன்னூர் - +91 89398 72544, 89399 98324
தூத்துக்குடி - +919941131882
நாமக்கல் - +91 8939856450
நெல்லூர் - +91 9000614411
விசாகப்பட்டிணம் - +91 9030906630
காக்கிநாடா - +91 8978086356

ஆயுஷ் அமைச்சகம் அங்கீகாரம் பெற்ற சித்தா, ஆயுர்வேத மருந்து பரிசோதனைக் கூடம்

www.mettexlab.com test@mettexlab.com